Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + 11

விலை: ரூபா 8.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:03 திருவள்ளுவர் ஆண்டு: 2036 ஆவணி- 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1426 றஜபு 19 (24.08.2005) புதன்கிழமை இதழ்:328

புலிகளுடனான பேச்சுக்கு எதிராக ஜே.வி.பி கொழும்பில் ஆர்ப்பாட்டம்!



கொழும்பு

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தக்கூடாதெனத் தெரிவித்தும் - புலிகள் மீது சர்வதேசம் அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் எனக் கோரியும், ஜே.வி.பியினர் நேற்று கொழும்பில் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர்.

கோட்டே ரயில் நிலையம் முன்பாக நேற்றுமாலை நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 3000 ஜே.வி.பியினர் கலந்துகொண்டனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஜே.வி.பியினரின் ஆர்ப்பாட்டத்தை படம்பிடித்த ஊடகவியலாளர் கைது!

கொழும்பு

கதிர்காமர் கொலையைக் கண்டித்தும் - புலிகளுடன் அரசு பேச்சு நடத்தவிருப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் - கொழும்பில் ஜே.வி.பியினர் நடத்திய ஆர்ப்பாட்டத்தில், செய்தி சேகரிக்கச் சென்ற தமிழ் ஊடகவியலாளர் ஒருவரை, புலிகளின் உளவாளி எனத் தெரிவித்து ஜே.வி.பியினர் மோசமாகத் தாக்கிய பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

கொழும்பிலிருந்து வெளிவரும் சுடர் ஒளி பத்திரிகையின் செய்தியாளரான யதுர்சன் என்பவரே ஜே.வி.பியினரால் தாக்கப்பட்ட பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டவராவார்.

கோட்டே ரயில் நிலையத்துக்கு முன்பாக நடத்தப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தின்போது - இவர் படம்பிடித்துக்கொண்டிருந்ததாகவும் - திடீரென அவரைச் சூழ்ந்துகொண்ட ஜே.வி.பியினர் புலிகளின் ஊடகவியலாளர் எனக்கூறி அவரது கைகளைப் பின்புறமாக மடக்கிப்பிடித்துக்கொண்டு தாக்கியதாகவும் தெரியவருகிறது.

மோசமாகத் தாக்கப்பட்ட பின்னர் இவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். பின்னர் பொலிஸார் இவரைப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரித்து வருகின்றனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழ்மக்கள் மீது படையினர் கெடுபிடி!

நூற்றுக்கணக்கானோர் கைது; சோதனைகள் தீவிரம்
மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவிப்பு!

கொழும்பு

அவசரகாலச் சட்டத்தின் கீழ் முப்படையினருக்கும், பொலிஸாருக்கும் வழங்கப்பட்டிருக்கும் விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி இலங்கைத் தீவு முழுவதிலும் தமிழ் மக்கள் கைது செய்யப்படுவது மற்றும் பாதுகாப்புக் கெடுபிடிக்குள்ளாக்கப்படுவது, அச்சுறுத்தப்படுவது போன்ற சம்பவங்கள் வேகமாக அதிகரித்து வருவதாக மனித உரிமை ஆர்வலர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் படுகொலையை அடுத்து கடந்த 13ஆம் திகதி அதிகாலை முதல் நாடெங்கும் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது.

இதன்பின்னர் - கொழும்பு நகரிலும், வடக்கு-கிழக்கிலும் தமிழ் மக்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை நகரப்பகுதி நேற்று மாலை சுற்றிவளைப்பு!

திருகோணமலை

திருகோணமலை நகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளை இராணுவத்தினரும், பொலிஸாரும் இணைந்து சுற்றிவளைத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர். நேற்று மாலை 4.30 மணி முதல் சுமார் இரண்டு மணிநேரம் சோதனையிட்டனர். இதனால் இந்தப்பகுதி மக்களிடையே பதற்ற நிலை ஏற்பட்டிருந்தது.

திருகோணமலை நகரில் சிவன் கோவிலடி, பஸ் நிலையப்பகுதிகளை சுற்றிவளைத்த படையினரும், பொலிஸாரும் வீடுவீடாகச் சென்று சோதனையிட்டனர். அத்துடன், குடும்ப அங்கத்தவர் விபரங்களையும் பதிவுசெய்தனர்.

இதேவேளை, மூன்றாம் கட்டையடி, பாலையூற்று, மடத்தடி, புதுக்குடியிருப்பு, மின்சார நிலைய வீதி, தபாற்கந்தோர் வீதி போன்ற பல (12 ஆம் பக்கம் பார்க்க)

இருபத்தொரு சிறுவர்கள் பெற்றோரிடம் ஒப்படைப்பு!

கிளிநொச்சி

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைய முன்வந்த 21 சிறுவர்கள் அவர்களின் பெற்றோரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டனர். வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் வண. பிதா கருணாரட்ணம் அடிகளாரின் தலைமையில் நேற்றுக் காலை 11.30 மணியளவில் இந்தச் சிறுவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் ஐ.நா. மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் செயலகப் பணிப்பாளர் மு.பாவரசன் கலந்துகொண்டார். (12 ஆம் பக்கம் பார்க்க)

பிரதமரின் பாதுகாப்பு அதிகரிப்பு; பொது நிகழ்வுகளையும் தவிர்ப்பு!

கொழும்பு

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொல்லப்பட்ட பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட முக்கிய அரசியல்வாதிகள் தமது பாதுகாப்பை அதிகரித்துள்ளதுடன், பொதுக் கூட்டங்களில் பங்குகொள்வதைத் தவிர்த்து வருகின்றனர்.

நேற்று கொழும்பில் நடைபெறவிருந்த ஊடகவியலாளர் மாநாட்டில் (12 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகாவுடன் ஜான் பீற்றர்சன் தொலைபேசி மூலம் ஆலோசனை!

கொழும்பு

போர்நிறுத்த உடன்பாட்டை முறையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பாக - விடுதலைப்புலிகள் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்திருப்பது தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகாவுடன் நேற்று முன்தினம் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளார்.

இது தொடர்பாக நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தகவல் வெளியிடுகையில் -

நேற்று முன்தினம் ஜனாதிபதி (12 ஆம் பக்கம் பார்க்க)

திருகோணமலை நகரிலிருந்து படைகளை குறைக்கமுடியாது!

படைத்தரப்பு அறிவிப்பு

திருகோணமலை

திருகோணமலை நகரில் அண்மைக்காலமாக குவிக்கப்பட்ட படையினரின் எண்ணிக்கையைக் குறைக்கமுடியாதென இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் படைத்தரப்பு தெரிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும், படை அதிகாரிகளுக்குமிடையில் நேற்று நடைபெற்ற சந்திப்பின்போதே படைத்தரப்பினரால் இந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

ரணிலின் இல்லத்தை படம் பிடித்தவர் கைது!

கொழும்பு

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ இல்லம் மற்றும் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலை உட்பட முக்கிய இடங்கள் சிலவற்றை வீடியோ படம் பிடித்ததாக கூறி, தமிழர் ஒருவரை கறுவாத்தோட்டப் பொலிஸார் கைது செய்தனர்.

நேற்றுக்காலை 11.30 மணிளவில் முக்கிய பிரமுகர்களின் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகள், 47 வயது மதிக்கத்தக்க இந்த நபரை கைதுசெய்து விசாரணைக்காக பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

குடும்பத்தினருடன் பல வருடங்கள் இங்கிலாந்தில் வாழ்ந்து வந்த இவர் விடுமுறையைக் கழிப்பதற்காக இலங்கை வந்திருந்தபோதே கைதுசெய்யப்பட்டதாக மேற்படி நபர் பொலிஸாரிடம் கூறினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021-2223891, 2226297, 077-2349999, 011-2372952/3, 011-2360290/1
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
Your friend in the skies...

இலங்கையில் முன்னணி வகிக்கும் உங்கள் உள்ளூர் விமான சேவை...

சுடர்ஒளி மீதான தாக்குதலுக்கு ஈழவேந்தன் எம்.பி.கண்டனம்!

யாழ்ப்பாணம் —

சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட ஆக்கிரமிப்புக்களால் பேரழிவுக்குள்ளாகிவரும் ஈழத்தமிழினத்துக்காக சுடர்ஒளி குரல் எழுப்புவதை நாம் ஏற்கமாட்டோம் எதிர்த்தே தீருவோம் என்ற தொனியில் சிங்களப் பேரினவாதத்தின் வெறியாட்டம் தான் சுடர்ஒளி மீது நடத்தப்பட்ட குண்டுத்தாக்குதல். இந்தத் தாக்குதல் எமக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளது என - தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க.ஈழ வேந்தன் தெரிவித்தார்.

ஊடகங்கள் உரிமைக்குரல் எழுப்புவதை நாம் தாங்கமாட்டோம் என்று சிங்கள வெறியாட்டம் தாண்டவமாடுகிறது. முன்பு உண்மையை எழுதியதற்காக றிச்சாட் டி சொய்சாவை அணைக்கும் நிலை ஏற்பட்டது. பின்பு நடேசன் அடுத்து சிவராம் என்று அடுத்தடுத்து இழக்கக்கூடாத உயிர்களை இழந்துள்ளோம். இன்று சுடர் ஒளியில் கைவைத்துள்ளது.

சுடர்ஒளி மீது நடத்திய சிங்கள வெறித் தாக்குதலை நாமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் வன்மையாக கண்டிப்பதுடன், நாடாளுமன்றத்தில் இந்தப் பிரச்சினையை எடுத்து ஆராய்வோம் எனவும் தெரிவித்தார்.

தேசிய கலை இலக்கிய போட்டியின் ஏனைய மாவட்ட மட்ட முடிவுகள்!

யாழ்ப்பாணம் —

கலாசார மரபுரிமைகள் அமைச்சால் நடத்தப்பட்ட தேசிய கலை இலக்கியப்பெருவிழாவை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளின் ஏனைய முடிவுகளும் வெளியாகியுள்ளன.

நாட்டுப்புறப்பாடல்
(கனிஷ்டபிரிவு)

முதலாமிடம் இ.டயானி (சண்டிலிப்பாய்), இரண்டாமிடம் ஜே.வர்ஜினி (தெல்லிப்பளை), மூன்றாமிடம் ஜெ.ஹம்சவதி (கரவெட்டி), நான்காமிடம் ம.மேரிடிலானி (ஊர்காவற்துறை), ஐந்தாமிடம் கு.சுஜாதா (காரைநகர்).

நாட்டுப்புறப்பாடல்
(சிரேஷ்டபிரிவு)

முதலாமிடம் ஜெ.வைஷ்ணவி (சண்டிலிப்பாய்), இரண்டாமிடம் சு.சசிகுமார் (பருத்தித்துறை), மூன்றாமிடம் நிலானி ரஞ்சன்ராஜா (சங்கானை), நான்காமிடம் மேரிவர்ஜினி சூசைப்பிள்ளை (ஊர்காவற்துறை), ஐந்தாமிடம் ந.ரஞ்சித்பாலன் (கரவெட்டி), கம்சத்வனி கோபாலசர்மா (உடுவில்).

நாட்டுப்புறப்பாடல்
(திறந்தபோட்டி)

முதலாமிடம் தமிழினி தங்கவடிவேல் (உடுவில்), இரண்டாமிடம் திருக்குமார் சுகிர்தன் (சண்டிப்பாய்), மூன்றாமிடம் ஜெ.சுபாசினி (நல்லூர்), நான்காமிடம் இராஜகோபால் அனுஷியா (ஊர்கவற்துறை), ஐந்தாமிடம் தி.நேசபவானி (தெல்லிப்பளை).

நடனம் (புதிய படைப்பு)

இதில் 1ஆம் 2ஆம் இடங்களைப் பெற்ற பிரதேச செயலகங்களின் பெயர்களே அறிவிக்கப்பட்டுள்ளன. முதலாமிடத்தை தெல்லிப்பளை பிரதேச செயலகமும், இரண்டாமிடத்தை நல்லூர் பிரதேச செயலகமும் பெற்றுக்கொண்டன.

சித்திரம் (சிரேஷ்டபிரிவு)

முதலாமிடம் அ.காண்டீபன் (உடுவில்), இரண்டாமிடம் வி.ஜெயச்சந்திரன் (யாழ்ப்பாணம்), மூன்றாமிடம் செ.சதீஸ்குமார் (சங்கானை), நான்காமிடம் இ.தயாழினி (ஊர்காவற்துறை), ஐந்தாமிடம் ந.பிரதாஸ் (கோப்பாய்).

சித்திரம் (கனிஷ்டபிரிவு)

முதலாமிடம் நா.ஐஸ்வர்யா (நல்லூர்), இரண்டாமிடம் அ.ஜோன்ஜிப்ரிக்கோ (சண்டிலிப்பாய்), மூன்றாமிடம் சி.யோசிவேந்தன் (உடுவில்), நான்காமிடம் கே.நிருஜன் (சங்கானை), ஐந்தாமிடம் க.கஜன் (மருதங்கேணி).

சித்திரம் (திறந்தபோட்டி)

முதலாமிடம் ம.கணேசானந்தன் (சங்கானை), இரண்டாமிடம் ர.பிரகாஷ் (கோப்பாய்), மூன்றாமிடம் க.சந்திரகுமார் (தெல்லிப்பளை), நான்காமிடம் கி.நித்தியாஞ்சலி (கரவெட்டி), ஐந்தாமிடம் ச.சரூபா (நல்லூர்).

தேசிய கலை இலக்கியப்பெருவிழாவின் மாவட்ட மட்டப்போட்டிகளில் கட்டுரை, கவிதை, சிறுகதை குறுநாடகம் ஆகியவற்றின் முடிவுகள் ஏற்கனவே பிரசுரமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தேசிய விளையாட்டுப் போட்டிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து 29 பேர்

யாழ்ப்பாணம் —

மாத்தளையில் இடம்பெறவுள்ள 31ஆவது தேசிய விளையாட்டு போட்டியில் பங்குபற்றுவதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து 29 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் இன்று புறப்படவுள்ளனர்.

கடந்த 13 ஆம், 14 ஆம் திகதிகளில் யாழ்.பொது விளையாட்டரங்கில் நடைபெற்ற மாகாண விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்று இவர்கள் தேசிய விளையாட்டுப் போட்டிக்கு தெரிவாகினர்.

இந்த விழாவில் வலைப்பந்தாட்ட போட்டியாளர்கள் 12 பேரும், மெய்வல்லுனர் வீரர்கள் 9 பேரும், மெய்வல்லுனர் வீராங்கனைகள் 8 பேரும் அடங்கியுள்ளனர்.

இவர்களுடன் சகல பிரதேச விளையாட்டு அலுவலர்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் உடன் செல்கின்றனர்.

காணாமற்போன மூவரின் வழக்கு நவம்பர் 28 வரை ஒத்திவைப்பு!

யாழ்ப்பாணம் —

யாழ்.குடாநாட்டில் இராணுவத்தால் கைது செய்யப்பட்டு காணமற்போன மூவரின் வழக்கு நேற்று யாழ். நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்திருந்தவேளை இராணுவத்தரப்பு சட்டத்தரணி நீதிமன்றில் ஆஜராகாததை அடுத்து மூன்று வழக்குகளும் நவம்பர் மாதம் 28 ஆம்திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டு அரியாலைப் பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போன யோசெப் ஆசீர்வாதம், யோன்பாரதி, யோவான் அன்ரனி, ஆகியோர் தொடர்பான வழக்குகளே நேற்று யாழ்.நீதிமன்றில் மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

எதிரிகள் தரப்பில் இராணுவ சட்டத்தரணிகள் நீதிமன்றில் ஆஜராகாததை அடுத்து ஆஜராகிய அரச சட்டத்தரணி சுகந்தி கந்தசாமி - இராணுவச் சட்டத்தரணி நீதிமன்றில் ஆஜராகததை அடுத்து வழக்கை ஒத்திவைக்குமாறு கோரியதால் மூவரின் வழக்கும் நவம்பர் மாதம் 28 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இதேவேளை, குடாநாட்டில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போனோரின் வழக்கு இன்று யாழ். நீதிமன்றில் நடைபெறவுள்ளது.

நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம் —

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தன் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் இளங்கலைஞர் மன்றம் - தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இன்று மாலை6.30 மணிக்கு சுகன்யா அரவிந்தனின் பாட்டு இடம்பெறும்.

இந்த நிகழ்வில் - வயலின் - ஏ.ஜெயராமன், மிருதங்கம் - கே.கஜன், முகர்சிங் - கே.நந்தகுமார் ஆகியோர் இசைக்கவுள்ளனர்.

இன்றைய ஆட்டம்

வடமராட்சி —

பருத்தித்துறை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து துடுப்பாட்ட சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திறிஸ்ரார் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திக்கம் இளைஞர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

க.பொ.த. உயர்தர மாணவருக்காக பவ்ரல் அமைப்பு நடத்தும் வினாடி வினாப் போட்டி

யாழ்ப்பாணம் —

சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு அமைப்பு (பவ்ரல்) க.பொ.த உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களிடையே அகில இலங்கை ரீதியில் வினாவிடைப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் ஒவ்வொரு பாடசாலையில் இருந்தும் ஐந்து மாணவர்கள் பங்குபற்ற முடியும். செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவங்களை அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இந்தப் போட்டிகள் சமஷ்டி முறையில் ஜனநாயகம், மனித உரிமைகள், செங்கோலாட்சி, இடைக்கால நிர்வாகம், மானிடகௌரவம் ஆகிய விடயங்களை உள்ளடக்கியதாக நடத்தப்படும்.

இதற்கான சுற்றறிக்கையை பாடசாலை அதிபர்களுக்கு பவ்ரல் அமைப்பு அனுப்பிவைத்துள்ளது. (122)

இறுதிப்போட்டி!

யாழ்ப்பாணம் —

சர்வதேச சேக்கிழார் விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கிடையில் நடத்தப்பட்ட போட்டிகளின் இறுதிப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கமத்தொழில் சார்ந்த விற்பனை அபிவிருத்தி மற்றும் இந்துசமய அலுவல்கள், கல்வி, வாழ்க்கை தொழில் பயிற்சிக்கு உதவும் அமைச்சு மாணவர்களுக்கிடையில் நடத்திய போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடத்தினைப் பெற்றவர்கள் பங்குபற்ற முடியுமென யாழ்.மாவட்ட இணைப்பாளர் நாகராஜா தெரிவித்தார்.

மனோகரா யாழ்ப்பாணம்
விக்ரம், சதா, விவேக், பிரகாஷ்ராஜ் மற்றும் பலர் நடித்த
அந்நியன்
வெகு விரைவில்
சிம்பு, கோபிகா மற்றும் பலர் நடித்த தொட்டி ஜெயா
காட்சி நேரம்: (பி.நே) 10.30, 2.30, 5.30, 9.30

நாதன்ஸ் யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)
சத்தியராஜ், வடிவேல், நமீதா நடித்த நகைச்சுவை நிறைந்த திரைப்படம்
இங்கிலீஷ்காரன்

நிறைஞ்சனாஸ் சங்கானை
அர்ஜுன், சினேகா மற்றும் பலர் நடித்த
சின்னா
காட்சிகள்: 11.00, 2.45, 5.00 (பி.நே)

நாகம்ஸ் சுன்னாகம்
இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின
ஜெயம்ரவி, ரேணுகாமேனன், வடிவேலு மற்றும் பலர் நடித்த

தாஸ்
காட்சிகள்:- 11.00,3.00, 7.00,10.00 (பழைய நேரம்)

ராஜா யாழ்ப்பாணம்
25 வரை காதல் புகழ் பரத், ரேணுகா மேனன் நடித்த
பெப்ரவரி 14

26 முதல்:- ஷாம், அஸின், பூஜா, லைலா
உள்ளம் கேட்குமே
பி.நே: 10.30, 2.30, 6.30 மட்டும்

சிறு விளம்பரங்கள்

பணிப்பெண் தேவை

திருநெல்வேலி பகுதியில் வீட்டு வேலைகள் பகுதிநேரமாகவோ, முழுமையாகவோ செய்யக்கூடிய பணிப் பெண் தேவை. சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும். விரும்பமுடையோர் பின்வரும் முகவரிக்கு கடிதம் மூலம் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல - 43, நமது ஈழநாடு, 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (2025)

கார் விற்பனைக்கு

13 சிறி 7017 தொடர் இலக்கம் கொண்ட திருமண வைபவங்களுக்கு ஏற்ற நல்ல நிலையில் உள்ள லான்சர் கார் விற்பனைக்குண்டு.

தொடர்வு - 0712533471, 0777167884. (2023)

நோய் தீரவேண்டுமா?

மருந்துகள், மாத்திரைகள் பாவித்து சலித்துவிட்டதா?

பல வைத்தியங்கள் செய்து நோய் கண்டுபிடிக்கப்படவில்லையா அல்லது தீரவில்லையா? பயம் வேண்டாம் மருந்துகள், பத்தியங்கள் எதுவுமற்ற வலியின்றிய அக்குபன்ஞ்சர் சிகிச்சை மூலம் நிரந்தர தீர்வு பெற்றிட நாடுங்கள். (ACU) Dr.R.P.Sankar (M.D.PHO), ஷென்மென் அக்குபன்ஞ்சர் வைத்தியசாலை, தபால் பெட்டிச் சந்தி, பலாலி வீதி, திருநெல்வேலி. (திருநெல்வேலி இலங்கை வங்கி அருகில்) (2024)

பதவி வெற்றிடம்

பிரபலமான காப்புறுதிக் கம்பனியொன்றுக்கு விற்பனை முகவர்கள் தேவை

தகைமை: க.பொ.த(சா/த) தரம் கணிதம் உட்பட 6 பாடம் சித்தி. ஆண்,பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பு: திறமைக்கு ஏற்ப குறுகிய காலத்தில் பதவி உயர்வு, இலவச காப்புறுதி, ஊக்குவிப்புத் தொகை, சுய தொழிலுக்கான பணம் என்பன வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 30/08/2005

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி
விளம்பர இல- 42
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(2022)

வட - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின் (NECCDEP) கீழான சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களின் மீள்பலப்படுத்தல் திட்டம் (TAARP)

மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி கோரல்

மேற்படி திட்டத்தின் கீழ் மாவட்ட கேள்விச் சபையினால் பின்வரும் வேலைக்காக கேள்விகள் வரவேற்கப்படுகிறது.

இல	ஒப்பந்த இல	ஒப்பந்தவேலை விபரம்	இக்ராட்	மீளளிக்கப்படாத தொகை	மீளளிக்கப்படும் தொகை
1	KN/TAARP/OFF/2005	மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தல்	M9	500.00	5000.00

1. ஆர்வமுடைய ஒப்பந்தகாரர்கள் கேள்விப் படிவங்களையும், மேலதிக தகவல்களையும் மாவட்ட பிரதித் திட்ட பணிப்பாளர், வட - கிழக்கு கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 03.09.2005 ஆம் திகதி 3.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக தலைவர், கேள்விச்சபை, கரையோர சமுதாய அபிவிருத்தித் திட்டம், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அல்லது நேரடியாகவோ அனுப்பப்படல்வேண்டும். கேள்விகள் யாவும் அன்றே பரிசீலிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். கேள்விச்சபை கூடும்பொழுது விண்ணப்பித்த ஒப்பந்தகாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் சமுகமளித்தல் வேண்டும்.

குறிப்பு - விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் தபால் உறையின் இடதுபக்க மூலையில் மாவட்ட திட்ட அலுவலகம் புனரமைத்தலுக்கான கேள்வி விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

தி.இராசநாயகம்
அரசாங்க அதிபர், கிளிநொச்சி

(சி-3692)

சுதா ரேடர்ஸ்

தச்சுவேலை செய்யும் மிசின்கள் 10", 12", 14", 16" ஆகியனவும் எலக்றிக் றில்லர்கள், றவுட்டர்கள், மாபிள் கட்டிங் மெசின்கள், கிறைன்டர்கள், அலுமினியக் கட்டிஸ் மெசின், வளைவு வெட்டும் மெசின்கள், மரம் துண்டு போடும் வாள், பிளாஸ்ரிக் எழுத்து வெட்டும் மெசின்கள், ஸ்ரான்ட் றில்லர்கள், வெல்டிங் பிளான்ட் வகைகள், கடைச்சல் மெசின் மற்றும் சகலவிதமான எலக்றிக் உபகரணங்கள் யாவையும் பெற்றுக்கொள்ளலாம். இவற்றுடன் கொம்பிறேசர், வாகனம் கழுவும் சேவிஸ் பம், சகல விதமான பிறஸ் வகைகளையும், வீட்டு உபகரணங்களான றைஸ்குக்கர், மிக்ஸி, சான்விச் மேக்கர், கான்ட் மிக்ஸர், வக்கியூம் கிளினர், அயன் பொக்ஸ் வகைகள், மின்விசிறி வகைகள் யாவற்றையும் பெற்றுக்கொள்ளலாம்.

01.08.2005 தொடக்கம் 31.08.2005 வரை அனைத்துப் பொருட்களுக்கும் 5 % விசேட கழிவாக வழங்கப்படும்.

சுதா ரேடர்ஸ்
339, அரசடி வீதி. நல்லூர் யாழ்ப்பாணம்.
(சி/4324)

தேர்தல் நடத்தப்படாவிட்டால் மக்கள் புரட்சி வெடிக்கும்!



கொழும்பு

அரசியலமைப்பின்படி ஜனாதிபதித் தேர்தல் - குறிப்பிட்ட தினத்தில் நடத்தப்படாவிட்டால், மக்கள் புரட்சி ஏற்படுவதைத் தடுக்கமுடியாது என, ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் தான் வெற்றி பெற்றால், நாட்டின் அனைத்துச் சமூகங்களும் உரிமைகளுடன் வாழ்வதற்கேற்ற வகையில், தேசிய பொதுக் கொள்கைப் பிரகடனமொன்றை ஏற்படுத்தப்போவதாகவும் அவர் தெரிவித்தார்.

பதுளையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வு காணப்படவேண்டும்

புதுடெல்கி

இலங்கையின் ஒருமைப்பாட்டைப் பாதிக்காத வகையில், இலங்கையின் நீண்டகாலப் பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வொன்று காணப்படவேண்டுமென இந்தியா தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனது இந்திய விஜயத்தை முடித்து திரும்பிய பின்னர் - இந்திய வெளியுறவு அமைச்சு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் -

இலங்கையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படும்போது, அது சகல சமூகத்தவர்களாலும் ஏற்றுக்கொள்ளப்படுவதாக இருக்கவேண்டும்.

இதேவேளை, போர்நிறுத்தம் முறையாகக் கடைப்பிடிக்கப்பட்டு அதனூடாகச் சமாதான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும், இலங்கையின் ஒருமைப்பாடு மற்றும் ஜனநாயகம் பாதிக்கப்படாதவகையில், பல்லினங்கள் வாழும் இலங்கையில், பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமென இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங் - ரணில் விக்கிரமசிங்கவிடம் தெரிவித்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும், புனர் வாழ்வுப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்படவேண்டும். இலங்கையின் பிரதேச ஒருமைப்பாடு பாதிக்கப்படாத வகையில், மக்களின் அடிப்படை உரிமைகள் உத்தரவாதமளிக்கப்பட்டு - பொருத்தமான தீர்வுகாணப்படவேண்டுமெனவும் அவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி புலமைப்பரிசில் விருதுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

கொழும்பு

ஜனாதிபதி நிதியத்தின் அனுசரணையுடன் வருடாந்தம் வழங்கப்பட்டுவரும் 'ஜனாதிபதி புலமைப் பரிசில் விருது'க்கான விண்ணப்பங்கள் ஜனாதிபதி செயலகத்தால் கோரப்பட்டுள்ளது.

அரச ஊழியர்கள், அரச ஊழியர்களின் பிள்ளைகள், நாடாளுமன்ற உறுப்பினர்களின் பிள்ளைகள், கலைஞர்கள் ஆகியோருக்கு இந்தத் திட்டத்தின்கீழ் 195 புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

உள்நாட்டுப் பல்கலைக்கழகங்கள், வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்கள் என்பவற்றில் பட்டப் படிப்பின் பின்னரான டிப்ளோமா, முதுமானிப்பட்டம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதற்காக இந்தப் புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.

தகுதியுடையோர் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியுமென ஜனாதிபதியின் செயலாளர் அறிவித்துள்ளார்.

இதேவேளை ஜனாதிபதி நிதியத்தின் பெயருக்கு சுய விலாசத்துடன் 200 ரூபாவுக்கான காசுக் கட்டளையை அனுப்பிவைப்பதன்மூலம் - இதுதொடர்பான விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் பெறமுடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். விஞ்ஞானம், விவசாயம், கட்டடக்கலை, பொதுநிர்வாகம், தகவல் தொழில்நுட்பம், சட்டம் உள்ளிட்ட 50 இற்கும் மேற்பட்ட துறைகளில் புலமைப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உன்படிக்கையில் சில சரத்துக்கள் மேலும் வலுவாக்கப்படவேண்டும்!



கொழும்பு

யுத்தநிறுத்த உடன்படிக்கையிலுள்ள சில சரத்துக்களை மேலும் வலுவடையச் செய்வதன் அவசியம் நிலவுவதாக, இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குப் பல பிரேரணைகளைச் செயற்படுத்துவதன் அவசியம் நிலவுவதாக - அதன் தலைவர் ஹக்ரப் கொல்லன்ட் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து யுத்தநிறுத்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ள இரு தரப்பினருமே தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

யுத்தநிறுத்த உடன்படிக்கை தொடர்ந்து மேற்கொள்ளப்படுவது தொடர்பாக - அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பேச்சுகள் தொடர்பாக கருத்துக் கேட்டபோதே அவர் இதைத் தெரிவித்தார்.

மலையக ஆசிரியர் நியமன –

போட்டிப் பரீட்சை முடிவுகளை வெளியிட உயர்நீதிமன்றம் தடை!

கொழும்பு

மலையகப் பாடசாலைகளுக்குத் தமிழ்மொழிமூல ஆசிரியர்களை நியமிப்பதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதற்குப் பரீட்சை ஆணையாளர் நாயகத்துக்கு - உயர்நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

குறிப்பிட்ட ஆசிரிய நியமனத்துக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மூன்று அடிப்படை உரிமைமீறல் மனுக்களைப் பரிசீலித்த பின்னரே, உயர்நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்தது.

குறிப்பிட்ட ஆசிரிய நியமனங்களுக்கு இந்து மதம், கிறிஸ்தவ மதம் ஆகியன மட்டும் தகைமைகளாகக் கோரப்பட்டிருந்தது. இதனால் இஸ்லாம் மதத்தில் சித்தியடைந்த மாணவர்களின் அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாக மனுக்களில் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது

இது தொடர்பாக வழக்கு விசாரணை இடம்பெற்று வருகின்றவேளையில் - பரீட்சை ஆணையாளர் நாயகம் பொறுப்பற்ற வகையில் நடந்து கொண்டமை குறித்து அதிருப்தி வெளியிட்ட உயர்நீதிமன்றம், இந்த இடைக்காலத் தடையுத்தரவைப் பிறப்பித்துள்ளது.

பிரித்தானிய தூதுவர் ஸ்ரீவனுடன் கூட்டமைப்பு இன்று சந்திப்பு!

கொழும்பு

கொழும்பில் உள்ள பிரித்தானிய தூதுவர் ஸ்ரீவன் இவானை, தமிழ் தேசிய கூட்டமைப்பினர் இன்று காலை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

பொதுக்கட்டமைப்பு ஏற்படுத்தப்படாமையால் தமிழர் தாயகப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மனிதாபிமானப் பணிகளை வழங்கமுடியாமல் இருக்கின்றமை, யுத்தநிறுத்த உடன்படிக்கை மீறப்படுகின்ற சம்பவங்கள் மற்றும் தென்பகுதி அரசியல் நிலை ஆகியன பற்றிப் பிரித்தானியத் தூதுவருடன் கலந்துரையாடவுள்ளதாகக் கூட்டமைப்புத் தெரிவித்துள்ளது.

பிரித்தானியத் தூதுவருடனான சந்திப்பில் ஜோசப் பரராஜசிங்கம், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பத்மினி சிதம்பரநாதன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் கஜேந்திரன் ஆகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை மிக அதிகமாம்!

ரான்ஸ் பரன்ஸ் அமைப்பு விமர்சனம்

கொழும்பு

அமைச்சரவையில் அமைச்சர்களின் எண்ணிக்கை மிக அதிகம் என ரான்ஸ் பரன்ஸ் இன்ர நஷனல் அமைப்பு விமர்சித்துள்ளது.

இலங்கை, போன்றதொரு நாட்டில் மிகப்பெரிய அமைச்சரவை ஒன்றை நடத்திச்செல்வது அடிப்படையற்ற அரசியல் சம்பிரதாயம் எனக் குறிப்பிடும் ரான்ஸ் பரன்சி அமைப்பு, இதற்கு எதிராக மக்கள் மத்தியில் எதிர்க் கருத்துகள் உருவாகவேண்டும் எனவும் கேட்டுள்ளது.

இல்லாவிட்டால் இந்தத் தவறான நடைமுறை சம்பிரதாயமாகத் தொடர்ந்து செல்லக்கூடும். நடைமுறை அரசில் இருவர் தவிர்ந்த அரசின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அமைச்சர்களாகவோ, பிரதி அமைச்சர்களாவோ பதவி வகிக்கின்றனர். இதன் காரணமாக நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதிக்கும் இதனைக் கண்காணிப்பது கடினம் என அவ் வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருப்போரை அதிரடிப்படையினர் வெளியேற்ற முயற்சி!

அம்பாறை

அம்பாறையில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருக்கும் மக்களை - அங்கிருந்து வெளியேற்றும் முயற்சிகளில் படையினர் ஈடுபட்டு வருவதாக - போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலிருந்து - விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியைச் சேர்ந்த மக்கள் எந்தப் பொருட்களையும் எடுத்துச் செல்ல படையினர் பெரும் கெடுபிடிகளை மேற்கொள்வது தொடர்பாகவே போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரிடம் பல கிராமங்களைச் சேர்ந்த மக்கள் - நேற்றுமுன்தினம் மாலை முறைப்பாடு செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் உள்ள மக்களைச் சந்திப்பதாக நேற்று முன்தினம் காலை கண்காணிப்புக்குழுவினர் தங்கவேலாயித புரத்துக்குச் சென்றனர். அங்கு கூடிய பெரும் திரளான மக்களே இவை பற்றியெல்லாம் முறைப்பாடுகளைச் செய்துள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தில் படையினருக்கான அதிகாரங்கள்

கொழும்பு

கடந்த வாரம் நீடிக்கப்பட்ட அவசரகாலச் சட்டத்தால் இராணுவத்தினரும், பொலிஸாரும் சந்தேகத்துக்குரிய எவரையும் கைது செய்யவும், தடுப்புக் காவலில் வைக்கவும் அதிகாரம் பெற்றுள்ளனர்.

இவ்வாறு செய்வதற்குப் பிடிபிணை அவசியமில்லை. எந்த வாகனத்தையும் சோதிக்கவும், கைப்பற்றவும், எடுத்துக் கொள்ளவும், பாதுகாப்பில் வைக்கவும் அதிகாரம் உண்டு. ஒரு நபரை இவ்வாறு 90 நாட்கள் வரை காவலில் வைத்திருக்க அவர்களுக்கு அதிகாரம் உண்டு.

கூட்டங்கள், ஆர்ப்பாட்டங்களைக் குறிப்பிட்ட காலத்துக்குத் தடைசெய்யும் படியும் இராணுவத்தினருக்கு ஜனாதிபதியால் உத்தரவிடமுடியும். பிரசுரங்கள், பத்திரிகைகளை தணிக்கை செய்வதற்கான தகுதி பெற்ற அதிகாரி ஒருவரை நியமிக்கவும் அவருக்கு அதிகாரம் உண்டு.

துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்பது, சுவரொட்டிகளைப்பொது இடங்களில் ஒட்டுவது ஆகியன இதில் அடங்கும். பொய்யான அறிக்கைகளை வெளியிடுவது, வதந்திகளைப் பரப்புவது, பாதுகாப்பு மற்றும் தற்காப்புச் சம்பந்தமான ஆவணங்களை வெளியிடுவது ஆகியவற்றைத் தடைசெய்வதும் இந்த அதிகாரத்தின்கீழ் அடங்கும்.

தமிழ்க் குழுப் பொறுப்பாளர்களுடன் வன்னிப் படைத்தளபதி சந்திப்பு!

வவுனியா

வவுனியாவில் மூன்று தமிழக் குழுக்களின் மாவட்டப் பொறுப்பாளர்களுக்கும், வவுனியா மாவட்ட இராணுவத் தளபதிக்கும் இடையில் கடந்த சனிக்கிழமை சந்திப்பு ஒன்று இடம் பெற்றதாகத் தெரியவருகிறது.

வவுனியா ரம்யா ஹவுசில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பில் ஈ.பி.ஆர்.எல்.எவ் (வரதர் அணி), புளொட், ஈ.பி.டி.பி ஆகிய தமிழ்க் குழுக்கள் உட்பட மாவட்ட பொறுப்பாளர்கள் கலந்து கொண்டதாகவும் -

இந்தச் சந்திப்பில் தமது உறுப்பினர்கள் பாதுகாப்புத் தொடர்பாகவே படைத்தளபதிகளுடன் ஆராய்ந்துள்ளதாகவும் தெரியவருகிறது.

பாதுகாப்பு கடமைகளில் அதிரடிப் படையினரின் விசேட மோட்டார் சைக்கிள் படையணி

கொழும்பு

நாட்டில் ஏற்படக்கூடிய எந்தவொரு நிலைமைக்கும் முகம்கொடுக்கக்கூடிய வகையிலே விசேட பயிற்சி பெற்ற - விசேட அதிரடிப்படையினரின் மோட்டார் சைக்கிள் படையணியொன்று பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி முதல் கொழும்பிலும், அம்பாறை மாவட்டத்திலும் இந்த விசேட அதிரடிப்படையின் மோட்டார் சைக்கிள் படையணி பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்படும்.

ஆட்கடத்தல், கொள்ளை, பணயக் கைதிகளாகப் பிடித்தல் ஆகிய குற்றச் செயல்களுக்கு எதிராகச் செயற்படுவதற்கும் இந்தப் படையணிக்குப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மேற்கொள்ளப்படும் பயங்கரவாதத் தாக்குதலுக்கும், பாதாள உலகக் கோஷ்டித் தாக்குதலுக்கும் முகம்கொடுக்கக் கூடிய வகையில் இவர்கள் பயிற்சி பெறுள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் இந்தப் படையணி பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிராகச் செயற்படும் அதேவேளை கொழும்பில் பயங்கரவாத நடவடிக்கைகள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகளுக்கு எதிராகச் செயற்படும் என விசேட அதிரடிப் படையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

ஆஷஸ் நான்காவது போட்டியில் ஷோன் டைட் சேர்க்கப்பட்டுள்ளார்!

லண்டன்

ஆஷஸ் தொடரின் நான்காவது டெஸ்டுக்கான அவுஸ்ரேலிய அணியில் வேகப்பந்து வீச்சாளர் ஷோன் டைட் இடம்பெற்றுள்ளார்.

இங்கிலாந்து - அவுஸ்ரேலிய அணிகள் தற்போது ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் மோதிவருகின்றன. இந்த 2 அணிகளுக்கிடையே நான்காவது கிரிக்கெட் டெஸ்ட் நாளை டிரென்ட்பிரிட்ஜில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கான இங்கிலாந்து அணியில் மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை. அவுஸ்ரேலிய அணியில் மட்டும் சில மாற்றங்கள் இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஜிலெஸ்பி அணியிலிருந்து நீக்கப்பட்டு அவருக்குப் பதிலாக 22 வயதான வேகப்பந்து வீச்சாளர் ஷோன் டைட் இடம்பெறுகிறார். இவர் நார்த்தாம்டன்ஷயர் அணிக்கு எதிரான 2நாள் பயிற்சிப் போட்டியில் 2 வீரர்களைக் காயப்படுத்திவிட்டாராம். டிம் ராபர்ட்ஸ் என்ற வீரருக்கு இடது கண் ஓரத்தில் 5 தையல்கள். இது ஒன்று போதுமே இவரை அணியில் சேர்க்க என்கிறார் பயிற்சியாளர் ஜோன் புக்கானன்.

துடிப்பும், வேகமும் கொண்ட இவருடன் இணைந்து பந்துவீசக் காத்திருக்கிறேன் என்று மக்ராவும் கூறிவிட்டார்.

நான்காவது டெஸ்டில் இங்கிலாந்து அணி வீரர்கள் எதற்கும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது.

சுப்பர் சீரிஸ் தொடருக்கான உலக லெவன் அணி அறிவிப்பு

டுபாய்

அவுஸ்ரேலிய - உலக லெவன் அணிகளுக்கிடையில் நடைபெறவுள்ள சுப்பர் சீரிஸ் கிரிக்கெட் தொடருக்கான உலக லெவன் அணி வீரர்கள் நேற்று அறிவிக்கப்பட்டனர்.

டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டிகளில் தற்போது முதலிடத்தில் இருக்கும் அவுஸ்ரேலிய அணிக்கும், உலக லெவன் அணிக்கும் இடையிலான ஒருநாள் போட்டிகள் - ஒக்ரோபர் 5, 7, 9ஆம் திகதிகளில் மெல்போர்னில் நடைபெறவுள்ளன.

ஆறு நாள் டெஸ்ட் போட்டியொன்று சிட்னியில் நடைபெறவுள்ளது. இப் போட்டிக்கான உலக லெவன் அணி வீரர்கள் நேற்று அறிவிக்கப்பட்டனர்.

டெஸ்ட் அணி - சிமித் (கப்டன்), டெண்டுல்கர், ஷேவாக், ராவிட் (துணைக் கப்டன்), லாறா, கலிஸ், பிளின்ரொப், பொலக், பவுச்சர், ஹர்மிசன், அக்தர், முரளிதரன், விற்றோரி.

ஒருநாள் அணி - பொலக் (கப்டன்), டெண்டுல்கர் (துணைக் கப்டன்), ஷேவாக், கலிஸ், லாறா, பீற்றர்சன், கிப்ஸ், பிளின்ரொப், சங்கஹார, அப்ரிடி, அக்தர், என்ரினி, முரளிதரன், விற்றோரி.

சிம்பாப்வே முத்தரப்பு தொடரில் சிறப்பாக வெற்றிபெறுவோம்! கங்கூலி கூறுகிறார்



புதுடெல்கி

பாகிஸ்தான் சுற்றுப் பயணத்திற்கு பின்பு இந்திய அணி எந்த ஒருநாள் போட்டித் தொடரிலும் சிறப்பாக ஆடவில்லை. இந்தமுறை சிம்பாப்வேயில் சிறப்பாக ஆடி வெற்றிபெறுவோம் என்று இந்திய அணித் தலைவர் கங்கூலி நம்பிக்கை தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெற்ற ஒருநாள் போட்டித் தொடரில் மூன்று இடதுகை பந்துவீச்சாளர்களை பயன்படுத்தியது சரிதான். இந்த மூன்று பேருமே மிகச் சிறந்த பந்துவீச்சாளர்கள். துடுப்பாட்ட வீரர்கள் சரியாக ஆடாததால்தான் அந்தப் போட்டியில் தோல்வி ஏற்பட்டது. ஆசிய - ஆபிரிக்க போட்டியில் சகீர்கான் சிறப்பாகப் பந்து வீசினார். சிம்பாப்வே தொடரில் அவர் இடம் பெறாதது குறித்து தெரிவாளர்களிடம்தான் கேட்கவேண்டும்.

ஐ.சி.சியின் புதிய விதிமுறைகள் இந்தத் தொடரில் அறிமுகமாகிறது. இது வீரர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மேலும் இதனால் வீரர்களின் திறமையில் உள்ள வித்தியாசங்களைக் காணமுடியும்.

ராவிட்டுக்கும், எனக்குமிடையே எந்தவித பிரச்சினையுமில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

உலக பட்மின்ரன் போட்டியில் தாபிக் ஹிதாயத் சம்பியன்!

அனஹீம்

ஒலிம்பிக் சம்பியன் தாபிக் ஹிதாயத், பட்மின்ரன் போட்டிகளில் உலகச் சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார்.

அமெரிக்காவின் அனஹீம் நகரில் உலக பட்மின்ரன் சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெற்றது.

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது. ஒலிம்பிக் சம்பியன் வீரர் தாபிக் ஹிதாயத் (இந்தோனேஷியா), உலகத் தரவரிசையில் முதல்நிலை வீரராக இருக்கும் லின் டேன் (சீனா) இறுதிப் போட்டியில் சந்தித்தனர்.

இரு முன்னணி வீரர்கள் மோதும் போட்டி என்பதால் எதிர்பார்ப்பு அதிகம் இருந்தது. எதிர்பார்ப்புக்கு மாறாக போட்டி சுலபமாக முடிந்துவிட்டது. தாபிக் 15:3, 15:7 என்ற நேர் செட்களில் லின் டேனை வீழ்த்தி உலகச் சம்பியனானார். ஒலிம்பிக் சம்பியன் வீரர் ஒருவர் ஒரே நேரத்தில் உலகச் சம்பியன் ஆவது இதுவே முதல் முறை.

நான் அதிஷ்டசாலி. இது மிகப் பெரிய சாதனை என்பதை உணர முடிகிறது. ஒரே நேரத்தில் ஒலிம்பிக், உலகச் சம்பியன் பட்டம் கைப்பற்றியதன் மூலம், உலகின் சிறந்த வீரர்களுள் நானும் ஒருவன் என்பதை நிரூபித்திருக்கிறேன் என்றார் தாபிக்.

யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆவரங்கால், பருத்தித்துறை அணிகள் வென்றன

யாழ்ப்பாணம்

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கம் நடத்திய கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில்- ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகமும், பெண்கள் பிரிவில்- பருத்தித்துறை ஜக்கிய விளையாட்டுக்கழகமும் வெற்றிபெற்று சம்பியனாகின.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கரப்பந்தாட்ட சங்க மைதானத்தில் மாலை 4 மணிக்கு நடைபெற்ற ஆட்டத்தில் ஆவரங்கால் மத்தி விளையாட்டுக்கழகம், எதிர்த்து விளையாடிய அச்சுவேலி விக்னேஸ்வரா விளையாட்டுக்கழகத்தை 3:2 என்ற செற் கணக்கில் 26:24, 25:21, 19:25, 25:27, 15:13 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான ஆட்டம் நேரம் போதாமையால் 20 புள்ளி என்ற அடிப்படையில் ஆட்டம் தொடங்கியது. இந்த ஆட்டத்தில் பருத்தித்துறை ஜக்கிய விளையாட்டுக்கழகம், எதிர்த்து விளையாடிய யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான விளையாட்டு அலகு அணியை 20:19 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

இந்த ஆட்டங்களுக்கு மத்தியஸ்தர்களாக என். சுரேஸ்குமார், எஸ். அப்புத்துரை ஆகியோர் கடமையாற்றினர்.

விளையாட்டு

ஆஷஸ் நான்காவது டெஸ்ட்; இங்கிலாந்தில் மாற்றமில்லை

லண்டன்

அவுஸ்ரேலியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் போட்டிக்கான இங்கிலாந்து அணியில் மாற்றம் செய்யப்படவில்லை.

இங்கிலாந்து வந்துள்ள அவுஸ்ரேலிய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட ஆஷஸ் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் போட்டியில் அவுஸ்ரேலியாவும், இரண்டாவது போட்டியில் இங்கிலாந்து அணியும் பெற்றிபெற்றன. மூன்றாவது போட்டி சமனிலையில் முடிந்தது. இதன் மூலம் தொடர் 1:1 என்ற சமனிலையில் உள்ளது. நான்காவது டெஸ்ட் நாளை ட்ரன்பிரிட்ஜ் நகரில் தொடங்கவுள்ளது. இதற்கான இங்கிலாந்து அணி கடந்த ஞாயிற்றுக் கிழமை அறிவிக்கப்பட்டது.

இதில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை. மூன்றாவது டெஸ்டில் விளையாடிய வீரர்கள் அனைவரும் இடம்பெற்றுள்ளனர். இது குறித்து இங்கிலாந்து அணி தெரிவுக் குழுவின் தலைவர் டேவிட் கிராவெனி கூறுகையில் -

கடந்த இரண்டு போட்டிகளில் எங்கள் வீரர்கள் எதிர்பார்த்ததைவிட அபாரமாக ஆடினர். தற்போது இவர்கள் நல்ல திறனில் உள்ளனர். இதனால், டிரன்ட்பிரிட்ஜ் போட்டியில் அவுஸ்ரேலியாவை வெல்வார்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார்.

அணி விபரம் -

மைக்கல் வோன் (கப்டன்), ட்ரெஸ்கொதிக், ஸ்ரரஸ், இயன் பெல், கெவின் பீற்றர்சன், பிளின்ரொப், ஜெரைன்ட் ஜோன்ஸ், கைல்ஸ், ஹோகாட், ஹர்மிசன், சைமன் ஜோன்ஸ் மற்றும் கிறிஸ் டிரீம்லெட்.

துஸ்யந்தன் கின்ன கிரிக்கெட்; மூன்றாம் சுற்றில் ஜொலிஸ்ரார்!

சுன்னாகம்

ஸ்கந்தா ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜெயசோதி துஸ்யந்தன் ஞாபகார்த்த 30 ஓவர்களுக்கு வரையறுக்கப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாம் சுற்று ஆட்டத்தில் ஸ்ரான்லி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்குத் தகுதி பெற்றது.

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி விளையாட்டுக் கழகம் 25.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஸ்ரான்லி அணியின் சார்பில் தனுஷ் 37 ஓட்டங்களையும், கஜதீபன் 14 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொலிஸ்ரார் அணியின் சார்பில் ஆதவன் 4 விக்கெட்டுக்களையும், ஜீரத்தனன் 2 விக்கெட்டுக்களையும், ஜதுகுலன் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் 28.3 ஓவர்களில் 6 விக்கெட் இழப்புக்கு 110 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெட்டுக்களால் இப்போட்டியில் வெற்றிபெற்றது.

இதில் ஜதுகுலன் 43 ஓட்டங்களையும், ஜீரத்தனன் ஆட்டமிழக்காமல் 23 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஸ்ரான்லி அணியின் சார்பில் கணேஸ்குமார் 3 விக்கெட்டுக்களையும், காந்தகுமார் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியில் சிறந்த வீரராக ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழக வீரர் ஜதுகுலன் தெரிவு செய்யப்பட்டார். (58)



அமெரிக்காவின் கலிபோர்னியாவில் நடைபெற்ற உலக பட்மின்ரன் சம்பியன் போட்டியில் மகளிர் பிரிவில் பட்டம் வென்ற சீனாவின் ஜ-ஜிங்பாங். ஞாயிற்றுக்கிழமை இரவு நடைபெற்ற இறுதியாட்டத்தில் 11-8, 9-11, 11-3 என்ற கணக்கில் சீனாவின் ஜாங்க் நிங்கை வென்றார் ஜிங்பாங்.

கனடாவின் ரொரன்ரோவில் நடைபெற்ற ரோஜர்ஸ் கிண்ண ரெனிஸ் போட்டியில் இரட்டையர் பிரிவில் பட்டம் வென்ற அமெரிக்காவின் மார்ட்டினா நவரத்திலோவா, அன்னா-டினா குரோன்பெல்ட் (இடது). ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதியாட்டத்தில் கோஞ்சிதா மார்ட்டினஸ், வர்ஜினா ருவானோ பாஸ்கல் ஜோடியை 5-7, 6-3, 6-4 என்ற கணக்கில் வென்றது நவரத்திலோவா ஜோடி.

கே.சி.சி.சி, சென்றலைட்ஸ் அணிகள் கூடைப்பந்தாட்டத்தில் சம்பியனாகின

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை 3.30 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான போட்டியில் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம் பல்கலைக்கழக அணியை 63:47 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

பெண்களுக்கான இறுதியாட்டத்தில் கொக்குவில் மத்திய சனசமூக விளையாட்டுக்கழகம், பட்டர்பிளை விளையாட்டுக்கழகத்தை 39:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது.

மாணவர்மலர்

மாணவர்களை பாடசாலைக்கு தேர்ந்தெடுப்பதற்கும், உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும் மாதிரிப் பரீட்சை வினாத்தாள் - 2005

தமிழ் மொழி (தாய் மொழி)

பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.

1. நாடு நல்ல நாடு
நலமே வாழும் நாடு
இலங்கை என்னும் பேர் கொண்ட சிங்கள, தமிழர், முஸ்லீம்கள,
இனிய நல்ல நாடு

2. இந்து சமுத்திரம் மீதினிலே
விளங்கும் புகழ் திருநாடு
பறங்கியர் வாழும் நாடு

4. இந்து, பௌத்தம், கிறிஸ்தவம்,
இஸ்லாம் விளங்கும் நாடு
இனிதே சேர்ந்து வாழ்ந்து
இகத்தில் பேர் பெறும் நாடு
(கவிஞர். பெ. புண்ணியமூர்த்தி)

3. ஆறு மலைகள் நீர் வீழ்ச்சி
அழகு சேர்ந்த நாடு
அருமை பெருமை வரலாறு
கொண்டது எம் திருநாடு

01. இப்பாடலை இயற்றியவர் யார்?
.....

02. இலங்கையில் வாழும் இனங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
1. ..... 2. .....

03. இலங்கையைச் சூழ்ந்துள்ள சமுத்திரம் எது?
.....

04. எமது நாட்டில் உள்ள இனங்களுள் இரண்டினைக் குறிப்பிடுக.
1. ..... 2. .....

05. முஸ்லீம்கள் பின்பற்றும் சமயம் எது?
.....

06. அழகு என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று தருக?
.....

07. இலங்கைக்கு அழகு சேர்ப்பது எதுவென பாடலில் குறிப்பிடுகிறது?
.....

08. இப்பாடலில் வரும் இணைமொழி ஒன்றினை எழுதுக.
.....

09. சமுத்திரம் என்பதன் ஆங்கிலச் சொல்லை எழுதுக.
.....

10. நாடு என்பதன் எதிர்க் கருத்துச் சொல் யாது?
.....

கீழேயுள்ள அட்டவணையில் சில எழுத்துக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வெழுத்துக்களைப் பயன்படுத்திப் பத்து சொற்களை அமைத்துப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

உ		ய		ன்		க			
	க		ம		பா		ண்	ழ	ட
டி		வ		ல		ம்			

11. .....
12. .....
13. .....
14. .....
15. .....
16. .....
17. .....
18. .....
19. .....
20. .....

பின்வரும் ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களை எழுதுக.

21. நூலகம். ..... 26. பூவில் .....
22. மேசையில் ..... 27. இளைஞன்.....
23. குறவன் ..... 28. புத்தகத்தில்.....
24. மரத்தால் ..... 29. பெட்டி.....
25. காடு..... 30. குரங்கால்.....

பொருத்தமான விடையின் கீழ்க் கோடிடுக.

31. சேவல் கூவுவது போல் மயில் (கத்தும், அகவும், பாடும்)
32. நாய் குரைப்பது போல் நரி (கத்தும், அலறும், ஊளையிடும்)
33. பாம்பு சீறுவது போல் பல்லி (சொல்லும், இரையும், கீச்சிடும்)
34. கிளி பேசுவது போல் புறா (குறுகுறுக்கும், அகவும், பேசும்)
35. புலி உறுமுவது போல யானை (கர்ச்சிக்கும், சீறும், பிளிறும்)

கீழே தரப்பட்டுள்ள சொற்களில் ஒரு சொல் ஏதோ ஒரு வகையில் வித்தியாசமானது. அச்சொல்லை இனங்கண்டு புள்ளிக்கோட்டில் எழுதுக.

36. செவ்வந்தி, ரோஜா, சூரியகாந்தி, அந்தூரியம்)
.....

37. புறா, மைனா, குருவி, வௌவால்
.....

38. குழந்தை, மகவு, அத்தை, சேய்
.....

39. ஆசிரியை, ஆசிரியர், குரு, ஆசான்
.....

40. அடவி, வாகனம், கானகம், காடு
.....

பின்வரும் படத்தையும், சொல்லையும் சேர்த்து எழுதுக.

41. + செடி = ...
42. + குட்டி = ...
43. + வேர் = ...
44. 10 + ஆயிரம் = ...
45. + இனம் = ...

கீழேயுள்ள பந்தியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள விடயங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✗) எனவும் கூறமுடியாது எனின் (0) எனவும் புள்ளிக்கோட்டில் அடையாளமிடுக.

நிரோசனின் குடும்பத்தார் கடந்த சனிக்கிழமை சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டனர். அவர்கள் காலை ஆறு மணியளவில் பேருந்து ஒன்றின் மூலம் தமது பயணத்தைத் தொடங்கினர். முதலில் தலதா மாளிகையை பார்வையிட அவர்கள்,

தமிழில் தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களை உபயோகித்து, புள்ளிக்கோட்டில் எழுதுக.

06. காலை வணக்கம் .....
07. பறங்கியர் .....
08. கடித உறை .....
09. இங்கே வா .....
10. தேசியக்கொடி .....
11. எனக்குப் பசிக்கிறது .....
12. பாண் .....
13. சீப்பு .....
14. வானவில் .....
15. சமையலறை .....
16. ஆசிரியர் .....
17. வட்டம் .....
18. பச்சை நிறம் .....
19. அன்னாசி .....
20. சிறிய பூனை .....

தமிழில் தரப்பட்டுள்ள சொற்களுக்கான ஆங்கிலச் சொல்லைக் கட்டத்திலி ருந்து தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் எழுதுக.

Circle, Chalk, Birthday, Sea, Silence, Flowers, Happy, Horse, Water, Slow.

21. பூக்கள் .....
22. சந்தோஷம் .....
23. கடல் .....
24. பிறந்தநாள் .....
25. வெண்கட்டி .....
26. வட்டம் .....
27. தண்ணீர் .....
28. குதிரை .....
29. அமைதி .....
30. மெதுவாக .....

தமிழ் மொழியில் உள்ள சொற்களின் கருத்தைச் சிங்கள எழுத்துக்களை உபயோகித்து, சிங்களத்தில் புள்ளிக்கோட்டில் எழுதுக.

31. தம்பி .....
32. பேசுங்கள் .....
33. கடிகாரம் .....
34. பெயர் .....
35. பென்சில் .....
36. வயிறு .....
37. அப்பம் .....
38. சிவப்பு .....
39. கத்தரிக்காய் .....
40. நீலோற்பலம் .....

பின்வரும் படங்களுக்குப் பொருத்தமான சிங்களச் சொல்லீல எழுதுக.

11 .....

12 .....

13  .....

உடற்கல்வி

பாடசாலைகளில் நடைபெறும் உடற்பயிற்சி நிகழ்ச்சிகளின் போது சில மாணவர்கள் செய்த நிகழ்வுகள் படங்களாகக் காட்டப் பட்டுள்ளன. அவற்றை அவதானித்து, அந்நிகழ்வுகளைக் குறிக்கும் இலக்கங்களை உரிய கூட்டினுள் எழுதுக. (இதற்காக பின் வரும் அட்டவணையில் காணப்படும் நிகழ்வுப் பெயர்களைப் பயன் படுத்துக.)

1. இலகுவாய் நிற்றல், 2. நிமிர்ந்து நிற்றல் 3. தாம்புநடை 4. குறுக்கிழுததல் 5. ஒற்றைச் சில்லு வண்டி 6. நடக்கும் கதிரைகள், 7. ஒற்றைக் காலில் நின்று பாய்தல் 8. இடுப்பை பின்னோக்கி வளைத்தல் 9. தவளை நடை, 10. படி ஒன்றில் பாய்ந்து ஏறுதல், 11. கால்களை இடர்ந்து பாய்தல், 12. வீச்சலாட்டம்.



ஆரம்ப விஞ்ஞானம்

நீர்

01. நீரின் பயன்பாடுகள் ஐந்து எழுதுக.
.....
.....
.....
.....

02. நீரைப் பெறக்கூடிய வழிகள் நான்கு எழுதுக.
1..... 2.....
3..... 4.....

(தொடரும்...)

அதன் பின், பேராதனைப் பூங்காவைப் பார்வையிட்டனர். மத்தியான உணவு உண்டதன் பின் தாயாரின் வேண்டுதலுக்கிணங்க குறிஞ்சி குமரன் ஆலயத்தைத் தரிசித்து, இரவு 9.00 மணியளவில் வீடுவந்து சேர்ந்தனர்.

46. நிரோசனின் குடும்பத்தார் சுற்றுலா சென்ற மாகாணம் ஊவா மாகாணமாகும். ( )
47. நிரோசனுக்கு சகோதரர்கள் இல்லை. ( )
48. அச்சுற்றுலாவில் பெண்களும் சென்றனர். ( )
49. நிரோசனின் குடும்பம் கொழும்பில் இருந்து சுற்றுலாவை ஆரம்பித்தனர். ( )
50. சுற்றுலா சென்ற வாகனம் பஸ் வண்டியாகும். ( )

கணிதம்

கீழே தரப்பட்டுள்ள எண்களை ஏதோவொரு கோலத்திற்கேற்ப அமைந்துள்ளன. அக்கோலத்தை இனங்கண்டு, வெற்றுக்கூடுள்ள இடத்திற்கு வரவேண்டிய எண்ணை வெற்றுக்கூட்டுக்குள் எழுதுக.

01.


02.


03.


04.


05.


குறித்த சில ஆண்டுகளில் குறிப்பிட்ட பாடசாலையொன்றில் புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கையை கீழேயுள்ள வரைபடம் காட்டுகிறது. அதை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.
(ஒவ்வொரு இலக்கமும் 5 மாணவர்களைக் குறிக்கிறது)



06. சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ள வருடம் எது?.....
07. சமமான மாணவர்கள் சித்தியடைந்துள்ள வருடங்கள் எவை?
.....
08. 2000ஆம் ஆண்டைவிட, 2001ஆம் ஆண்டு சித்தியடைந்த மாணவர்கள் எத்தனை பேர்?..... .....
09. 2002ஆம் ஆண்டைவிட, 2004ஆம் ஆண்டு எத்தனை மாணவர் குறைவாக சித்தியெய்தியுள்ளனர்? .....
10. 2000 ஆம் ஆண்டு தொடக்கம் 2005ஆம் ஆண்டு வரை மொத்தமாக சித்தியடைந்துள்ள மாணவர் எத்தனை பேர்?.....

இலக்கம் 11 தொடக்கம் 12 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

11. வியாபாரியொருவன் ரூபா 8/= வீதம் 410 ஆப்பிள் பழங்களை வாங்கினான். அவற்றில் அரைவாசியை ரூபா 10/= இற்கு விற்பனை செய்தான். மீதியை 09/= ரூபாவிற்கு விற்றான். வியாபாரி பெற்ற இலாபம் எவ்வளவு?
.....
12. 54 பிஸ்கட்டுக்கள் 9 பிள்ளைகளுக்குப் பகிரப்பட்டன. 3 பிள்ளைகளுக்கு கிடைத்த பிஸ்கட்டுக்களின் தொகை யாது?.....
13. ஒரு கூடையில் 360 தோடம்பழங்கள் இருந்தன. அவற்றுள் 120 விற்கப்பட்டுவிட்டன. மிகுதி நான்கு சமமான குவியல்களாகப் பிரிக்கப்பட்டன. ஒரு குவியலில் உள்ள தோடம்பழங்கள் எத்தனை?
.....
14. கமலா 5 மீற்றர் துணியும், ஒரு சட்டையும் வாங்கினாள். சட்டையின் விலை 125 ரூபா ஆகும். 1000 ரூபா செலுத்திய கமலாவுக்கு கடைக்காரன் 150 ரூபாவை மிகுதிப்பணமாகக் கொடுத்தார். 5 மீற்றர் துணிக்கான விலை யாது?
.....
15. விளையாட்டுப் போட்டி ஒன்றுக்காக 678 குளிர்பானப் போத்தல்கள் கொண்டுவரப்பட்டன. அவற்றுள் 8 போத்தல்கள் உடைந்துவிட்டன. 12 போத்தல்கள் மிஞ்சியிருந்தன. உபயோகப்பட்ட குளர்பான போத்தல்களின் எண்ணிக்கை யாது? .....

'மாலா' வியாபார நிலையத்தின் விலைப்பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து, கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

1 kg சம்பா அரிசி	38/=	1 போ.மண்ணெண்ணெய்	22\=
1 சன்லைட்	14/=	1 பக்கட் அங்கர்	144\=
1 kg பருப்பு	52/=	1 தேங்காய்	16\=
100g மாசி	18/=	1 டசின் தீப்பெட்டி	60\=
500g தேயிலை	72/=	1kg நெத்தலி	60\=

16. கண்ணன் 1/2kg தேயிலையும், 1/2 டசின் தீப்பெட்டியும், 3 தேங்காய்களும் வாங்கினான். அவன் செலுத்த வேண்டிய பணம் எவ்வளவு? .....
17. 250 கிராம் மாசியும், 2 பக்கட் அங்கரும் வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?.....
18. கபிலனிடம் 200 ரூபா மாத்திரம் இருந்தது. 3 சன்லைட், 6 போத்தல் மண்ணெண்ணெய், 2kg நெத்தலி ஆகிய பொருட்களை வாங்குவதற்கு இன்னும் எவ்வளவு பணம் தேவை?
.....
19. மதன் 5kg பருப்பும், சம்பா அரிசியும் வாங்கினான். அவனிடம் செலுத்த வேண்டிய தொகை 412 ரூபா எனக் கடைக்காரர் அறவித்தால், மதன் வாங்கிய சம்பா அரிசியின் தொகை யாது?
.....

20. 500g பருப்பு, 6 தேங்காய், 150g மாசி ஆகிய பொருட்களை வாங்குவதற்குத் தேவையான பணம் எவ்வளவு?
.....

பாடசாலையொன்றில் 5ஆம் வகுப்பொன்றில் மாணவர் விரும்பிய சிற்றுண்டிகளின் தொகை கீழே தரப்பட்டுள்ளது. படத்தை அவதானித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.



21. மூன்று சிற்றுண்டிகளையும் விரும்பியோர் எத்தனை பேர்?
.....
22. வடையையும், லட்டையும் மட்டும் விரும்பியோர் எத்தனை பேர்?.....
23. 6 பேர் மட்டும் விரும்பிய சிற்றுண்டிகள் எவை?.....
24. லட்டை மட்டும் விரும்பிய நபர்கள் எத்தனை பேர்? .....
25. 4 பேர் மட்டும் விரும்பிய சிற்றுண்டிகள் எவை?.....

கீழுள்ள உருவங்களின் எண்ணிக்கையை உரோமன் இலக்கங்களில் எழுதுக.

26. (.....)
27.  (.....)
28. (.....)
29. (.....)
30. (.....)

பின்வரும் உருக்களில் செங்கோணம் உள்ள உருவின் கீழ் கோடிடுக.

31. 
32.
33.
34.
35.

நிறந்தீட்டப்பட்டுள்ள பகுதியை முழு உருவின் பின்னங்களாக எழுதுக.

36.  .....
37.  .....
38.  .....
39. .....
40. .....

பின்வரும் வினாக்களுக்கான விடையைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

41. மாலன் கடந்த 12 திகதி சனிக்கிழமை, அடுத்து வரும் வெள்ளிக்கிழமை தனது பிறந்தநாள் எனத் தனது நண்பர்களிடம் கூறினான். மாலனின் பிறந்தநாள் எத்தனையாம் திகதி?
.....
42. சங்கீதாவை விட அனிதா நான்கு வயது சிறியவள். அனிதாவைவிட கவிதா 7 வயது பெரியவள். அவர்களுள் வயது கூடியவர் யார்? .....

வெற்றுக் கூட்டுக்குள் வரவேண்டிய இலக்கத்தை எழுதுக.

43.
$$\begin{array}{r} 6\square5 \\ 3\,1\,2 \\ \hline 3\,8\,3 \end{array}$$

44.
$$\begin{array}{r} 1\,2\,5 \\ \square\,9\,2 \\ \hline 9\,1\,7 \end{array}$$

45.
$$\begin{array}{r} 3\,4\,8 \\ 1\,1\square \\ \hline 3\,2\,5 \end{array}$$

46.
$$\begin{array}{r} 7\,2\,4 \\ 1\square\,6 \\ \hline 9\,0\,0 \end{array}$$

47.
$$\begin{array}{r} 5\,1\,2 \\ 1\,4\square \\ \hline 6\,6\,1 \end{array}$$

48.
$$\begin{array}{r} 2\,1\square \\ 3\,1\,4 \\ \hline 5\,2\,9 \end{array}$$

பின்வரும் வெற்றுக் கட்டங்களுக்குப் பொருத்தமான குறியீடுகளை இனங்கண்டு, அக்குறியீட்டை வெற்றுக் கூட்டுக்குள் வரைக.

49.


50.


ஆங்கிலம் (சர்வதேச மொழி)

பின்வரும் உருக்களுக்குப் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை, ஆங்கில எழுத்துக்களை உபயோகித்து புள்ளிக் கோட்டில் எழுதுக.



இளவாலையில் அமைக்கப்படவுள்ள
மத்திய மருந்தகத்துக்கான காணியை தெரிவு செய்யுமாறு கோரிக்கை!

இளவாலை

இளவாலையில் அமைக்கப்படவிருக்கும் மத்திய மருந்தகத்துக்கு என இதுவரையும் ஒரு சரியான இடம் தெரிவுசெய்யப்படாமல் இருப்பதாகத் தெரியவருகிறது.

இளவாலைப் பகுதியில் அமைக்கப்படவிருக்கும் மத்திய மருந்தகத்துக்கு ஒரு சரியான அமைவிடத்தை அந்தப்பகுதி சுகாதாரப் பரிசோதகர் கோரியிருந்தார். இந்த மத்திய மருந்தகத்தை அமைப்பதற்குத் தமது திணைக்களத்திலிருந்து நிதி ஒதுக்கப்படவுள்ளதாகவும் - இந்தக் கட்டடத்தை அமைப்பதற்கான அரச காணிகள் பற்றிய விபரம் தனக்குத் தெரியவில்லை எனவும் தெரிவித்த பொது சுகாதாரப் பரிசோதகர் - அந்தப் பகுதியில் அரச காணி இருந்தாலோ அல்லது காணியை யாராவது நண்கொடையாகவோ வழங்க முன்வந்தாலோ அதனைத் தமக்குத் தெரியப்படுத்துமாறும் கோரியிருந்தார்.

இதன் அடிப்படையில் மாரீசன்கூடல் பகுதியில் ஒரு காணியும், பெரிய விளானில் இன்னோர் காணியும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு காணிகளிலும் சரியான இடத்தில் நோயாளர் போக்குவரத்து வசதி, வயோதிபர்கள் வந்துசெல்லும் தன்மை, குடிநீர் வசதி, மலசலகூட வசதி என்பவற்றுடன் கட்டட விஸ்தீரண வசதி என்பவற்றை அடிப்படையாகக் கொண்டே இந்த இடம் தெரிவுசெய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ள சண்டிலிப்பாய் பிரதேச செயலர் -

இது தொடர்பாக சண்டிலிப்பாய் பிரதேச செயலக உதவித் திட்டமிடல்பணிப்பாளர், மானிப்பாய் பிரதேச சபை செயலாளர், சுகாதாரத் திணைக்களப் பிரதிநிதி ஆகியோரை நேரில் சென்று இடங்களைப் பார்வையிட்டு - சரியான இடத்தைத் தெரிவுசெய்யுமாறு கேட்டுள்ளார். (44)

நாட்டுப்புறப் பாடல் போட்டியில் சண்டிலிப்பாய் செயலகம் முதலிடம்

யாழ்ப்பாணம்

தேசிய கலை, இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு - பிரதேச செயலகங்களுக்கு இடையில் மாவட்ட மட்டத்தில் நடத்தப்பட்ட நாட்டுப்புறப் பாடல் போட்டியில் -

கனிஷ்ட பிரிவிலும், சிரேஷ்ட பிரிவிலும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

நாட்டுப்புறப் பாடல் போட்டியில், கனிஷ்ட பிரிவில் சண்டிலிப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த இ.தயாளினி முதலாமிடத்தையும், தெல்லிப்பளையைச் சேர்ந்த வர்ஷனி இரண்டாம் இடத்தையும், கரவெட்டியைச் சேர்ந்த ஹம்சவதி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

நாட்டுப்புறப் பாடல் போட்டியில் சிரேஷ்ட பிரிவில் சண்டிலிப்பாயைச் சேர்ந்த ஜெ.வைஷ்ணவி முதலாமிடத்தையும், பருத்தித்துறையைச் சேர்ந்த சு.சசிகுமார் இரண்டாமிடத்தையும், சங்கானையைச் சேர்ந்த நிலானி ரஞ்சன்ராஜா மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர்.

நாட்டுப்புறப்பாடல் திறந்த போட்டியில் உடுவிலைச் சேர்ந்த தமிழ்னி தங்கவடிவேலு முதலாமிடத்தையும் - சண்டிலிப்பாயைச் சேர்ந்த திருக்குமார் சுகிர் தன் இரண்டாமிடத்தையும், நல்லூரைச் சேர்ந்த ஜெ.சுபோதினி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளனர். (44)

கற்றல் வளம் (இலங்கைக் கலை) வீடியோ இறுவட்டு வெளியீடு

யாழ்ப்பாணம்

சித்திர பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு உதவும் வகையில், யாழ்.இந்துக் கல்லூரி சித்திர ஆசிரியர் து.துசியந்தனின் ஆக்கத்தில் "கற்றல் வளம்" எனும் வீடியோ இறுவட்டு எதிர்வரும் 27 ஆம் திகதி பிற்பகல் 3.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

இலங்கையின் அனுராதபுர, பொலநறுவை, மத்திய, கண்டிய, கொழும்பு நகர்க்கால புராதன, தற்காலப் படைப்புகள் பற்றிய தமிழ்மொழிமூல கட்புல விளக்கத்தை தருவதாக இந்த இறுவட்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.ஆசிரிய வள நிலைய முகாமையாளர் ச.இரவீந்திரன் கலந்துகொள்ளவுள்ளார்.

சமூகவிரோத செயலைக் கட்டுப்படுத்த ஊரெழுவில் விழிப்புக்குழு அமைப்பு!

யாழ்ப்பாணம்

ஊரெழுவில் அண்மைக் காலமாக நடைபெற்றவருகின்ற சமூகவிரோதச் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்காக ஊரெழு கிராம அபிவிருத்திச் சங்கமும் - கலைவாணி சனசமூக நிலையமும் இணைந்து விழிப்புக்குழு ஒன்றை அமைத்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஊரெழு கிராம அபிவிருத்தி மண்டபத்தில் கிராம அபிவிருத்திச் சபைத் தலைவர் ந.கந்தையா தலைமையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது இத்தகைய தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இந்தப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரிப்பதோடு, கிராம அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான 50,000 ரூபா பெறுமதியான சொத்துக்களும் களவாடப்பட்டுள்ளது.

இப்படியான சம்பவங்களைக் கட்டுப்படுத்துவதற்காக அந்தப்பகுதி இளைஞர்களையும், கலாசாரம் பேணும் குழுவையும் உள்ளடக்கியதாக ஓர் விழிப்புக்குழு ஒன்று அமைப்பதற்கான முடிவுசெய்யப்பட்டது.

விழிப்புக்குழு அமைப்பது தொடர்பான கலந்துரையாடலில் பொது அமைப்புக்கள் பிரதிநிதிகள், கிராம சேவையாளர், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

சங்காபிஷேகம்

மட்டுவில்

மட்டுவில் வடக்கு அருள்மிகு திருவங்கேணிப் பிள்ளையார் ஆலய கும்பாபிஷேக ஓராண்டு பூர்த்தியைக் குறிக்கும் முகமாக - எதிர்வரும் 30 ஆம் திகதி சங்காபிஷேகம் இடம் பெறவுள்ளது.

அன்று காலைமுதல் சகஸ்ர நாம சங்காபிஷேகமும் சுவாமி திருவீதியுலாவும் திருவூஞ்சலும் இடம்பெற்று, நண்பகல் அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (24)

ஐஸ்கிறீம் விற்பனை அதிகரிப்பு

மட்டுவில்

தென்மராட்சியின் பல்வேறு பகுதிகளிலும் அண்மைக்காலமாக ஐஸ்கிறீம் விற்பனை செய்யும் வாகனங்களால் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்கெள்கின்றனர்.

உரத்த ஒலி யில் பாடல்களை ஒலிபரப்பியபடி ஒன்றன்பின் ஒன்றாகப் பல ஐஸ்கிறீம் வாகனங்கள் வியாபாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. அதிலும் விடுமுறை நாட்களில் இவற்றின் எண்ணிக்கை அதிகமாகவுள்ளது.

இதனால் விபத்துக்குள் ஏற்படும் சம்பவங்களும் அதிகரிக்கிறது. அத்துடன் ஏழை மக்கள் அதுவும் சிறு குழந்தைகள் உள்ளவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். இதனைத் தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனப் பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர். (24)

நல்லை ஆதீனத்தில் பீடரோகண விழா

நல்லூர்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தின் 39 ஆவது பீடரோகண விழா - எதிர்வரும் 26 ஆம் திகதி ஆதீனத்தில் நடைபெறவுள்ளது. காலை 10 மணிக்கு குருமூர்த்த ஆலயத்தில் எழுந்தருளி இருக்கும் பாலாம்பிகை சமேத வைத்தியநாதசுவாமிக்கு அபிஷேக பூசை வழிபாட்டுடன் ஆரம்பமாகி, பீடாபிஷேகம் குரு பூசை பட்டண பிரவேசம், மகேஸ்வர பூசை ஆகிய வழிபாடுகளும் நடைபெறும்

ஆவரம்பிட்டிக்குளம் புனரமைப்பு

மட்டுவில்

மட்டுவில் வடக்கு ஆவரம்பிட்டிக்குளம் கனரக வாகனங்களின் உதவியுடன் ஆழமாக்கப்பட்டுப் புனரமைக்கப்பட்டு வருகிறது. நாடளாவிய ரீதியில் பத்தாயிரம் குளங்களைப் புனரமைக்கும் திட்டத்தின் கிழேயே இந்தக் குளம் புனரமைக்கும் பணி இடம்பெறுகிறது

இந்தக்குளம் புனரமைக்கப்பட்டதும், இந்தப் பகுதி விவசாயிகளும், குடியிருப்பாளர்களும் பெரும் பயனடைவர் என்பது குறிப்பிடத்தக்கது. (24)

நிரந்தர வீடமைப்பு பணிகளுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம்

வடமராட்சி

வடமராட்சிப் பகுதியில்சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடமைக்கும் பணிகளின்கீழ், தற்போது 177 நிரந்தர வீடுகள் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

வடமராட்சிப் பகுதியில் சுனாமியால் பாதிக்கபட்டு - தமது வீடுகளை இழந்த 5200 குடும்பங்களுக்கு நிரந்தர வீடமைத்துக் கொடுப்பதற்கு கியுடெக், கியுமெடிக்கா, வீற்ஸ், போரூட், யு.என்.கபிற்ஸ், சர்வோதயம், கெயர் போன்ற நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அனைத்து நிறுவனங்களும் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி 5200 வீடுகளையும் இந்த வருடத்திற்குள் கட்டிமுடிக்க வேண்டும்என்று, அரசஉயர்அதிகாரிகளால் பணிக்கப்பட்டிருந்தது. எனினும் தற்போது நிரந்தர வீடமைக்கும் பணிகள் மந்த கதியிலேயே நடைபெற்று வருகின்றன.

ஆகவே, தமது பாதிப்பைக் கருத்திற்கொண்டு, அரச சார்பற்ற நிறுவனங்கள்தமது பணியை சிறந்த முறையில் மிகவும் வேகமாகச் செய்யவேண்டும் என்றும், அரச சார்பற்ற நிறுவனங்கள் தமது பணியைச் சிறப்பாக மேற்கொள்ளப் பொது மக்கள் தமது ஆதரவை வழங்கவேண்டும் என்றும் அரச உயர் அதிகாரிகள் கேட்டுக்கொள்கிறார்கள்.

தரம் குறைந்த கட்டடப் பொருட்களை பாவித்து மலசலகூடங்கள் அமைப்பு

வண்ணை

நெடுந்தீவுப் பிரதேசத்தில் அரசசார்பற்ற நிறுவனம் ஒன்றால் தமிழ்நாட்டிலிருந்து தாயகம் திரும்பி வந்தோருக்கு என அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் - தரம் குறைந்த கட்டடப் பொருட்களைக்கொண்டு கட்டப்பட்டிருப்பதாகப் பொது மக்கள் விசனம் தெரிவித்தனர்.

கட்டடவேலைகளை ஒப்பந்தம் செய்யாமல் தனியார் ஒருவரிடம் சுயேச்சையாக வழங்கியமையே இதற்கான காரணம் எனத் தெரிவிக்கப்பட்டது. அமைக்கப்பட்ட மலசல கூடங்கள் உடைந்துவிழும் தறுவாயில் உள்ளதைக் காணமுடிகிறது.

நிதியிடும் சர்வதேச நிறுவனங்கள் - மக்களுக்கும் பயன்படும் வகையில் திட்டங்களைத் தீட்டுவதுடன், செயற்படுத்தினால் நல்லது என்று பாதிக்கப்பட்ட ஒருவர் தெரிவித்தார். (111)

நெடுந்தீவு பிரதேசத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு

வண்ணை

யு.என்.எச்.சி.ஆர் அனுசரணையுடன், சுகவாழ்வுக்கான பயணங்கள் நிறுவனத்தால் நெடுந்தீவு பிரதேசத்தில் எயிட்ஸ் விழிப்புணர்வு நிகழ்வு கடந்த வாரம் தொடர்ந்து நடத்தப்பட்டது. யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதி கிறிஸ்தோபர், ஷெரின் ஆகியோர் நிகழ்வுகளை ஆரம்பித்து வைத்தனர்.

ஜி.நக்கீரன், கே.பிரசாந்தன், இ.ஜீவகலா, மிதுனா ஆகியோர் கருத்துரைகளை வழங்கினார்கள். அகதிகளாகத் தமிழ் நாட்டிலிருந்து தாயகம் திரும்பியோர் உட்பட, சுமார் 300 பேர் இதில் பங்குபற்றினார்கள். இதற்கான ஏற்பாடுகளை நெடுந்தீவுப் பிரதேச செயலர் பற்றிக் டிரஞ்சன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (111)

பருத்தித்துறை மத்திய மருந்தகத்துக்கான அடிக்கல் நாட்டும் விழா அலமையில் தும்பளை தெங்கன் கிணற்றடியில் நடைபெற்றபோது - யாழ்.பிராந்தி சுகாதாரப் பணிப்பாளர் டொக்டர் ஆர்.கேதீஸ்வரன் அடிக்கல்லை நாட்டி வைபதைப் படத்தில் காணலாம். (1

இவர் பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று

பெயர் : ந.நர்த்தனா
முகவரி : பிரான்ஸ்

பெயர் : த.யதுர்சனா
முகவரி : சித்தன்கேணி

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்
முகவரி
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும் புகைப்படமும் இதனுடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

வவுனியா மாவட்ட அரச காணிகளில் குடியேறுவோர் மீது சட்ட நடவடிக்கை

- வவுனியா அரச அதிபர் சண்முகம் தெரிவிப்பு -

வவுனியா

வவுனியா மாவட்டத்திலுள்ள அரச காணிகளிலும், குளக் காணிகளிலும் சட்டவிரோதமாகக் குடியேறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக வவுனியா அரச அதிபர் சண்முகம்தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

வவுனியாவிலுள்ள பல கிராமசேவை அலுவலர் பிரிவுகளிலும் அரச காணிகளைப் பலர் சட்டவிரோதமாகத் துப்புரவு செய்து பயன்படுத்துவதாக முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதற்கமைய சட்ட விரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்காக, அவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்குமாறு சகல பிரதேச செயலர்களுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா - அண்ணாநகர் பரமேஸ்வரா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் ஒருவர் சட்ட விரோதமாகக் குடியேறியுள்ளார். அந்தச் சட்ட விரோத குடியேற்றத்துக்கு வவுனியா பிரதேச செயலர் ஆதரவாக உள்ளார். அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறீர்கள் என செய்தியாளர் கேட்ட கேள்விக்கு அரச அதிபர் பதிலளிக்கையில் -

அவ்வாறான ஒரு முறைப்பாடு எனக்கு இதுவரை கிடைக்கவில்லை. சட்டவிரோத குடியேற்றத்துக்குப் பிரதேச செயலர் ஆதரவாக இருக்கிறார் என்ற முறைப்பாடு எழுத்து மூலமாகக் கிடைக்குமாயின், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வவுனியா பிரதேச செயலரும் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படுவார் என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம் தொடர்பாக பூநகரியில் முன்னோடிக் கலந்துரையாடல்கள்

பூநகரி

பூநகரி-கொம்பன் கிராமத்தில் தமிழ்த்தேசிய எழுச்சிப் பிரகடனம் தொடர்பான கலந்துரையாடல் - கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் முட்கொம்பன் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

தேசிய எழுச்சி பேரவையைச் சேர்ந்த பசுபதி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் - தமிழ் தேசிய எழுச்சி பிரகடன மாநாடு சம்பந்தமாகக் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் பூநகரி பிரதேச செயலாளர் பாலசுப்பிரமணியம், பிரதேச அரசியற்துறைப் பொறுப்பாளர் ஈகைவேந்தன் ஆகியோர் நிகழ்த்தினர்.

இதில் பொது அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டு, தமது கருத்துரைகளையும், ஆலோசனைகளையும் வழங்கினர்.

14 தமிழ் பெண்கள் கைது!

மன்னார்

தலைமன்னார்-பேசாலை வீதியிலுள்ள துல்லிக் குடியிருப்பு,நூறு வீட்டுக் குடியேற்றத் திட்டப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இராணுவத்தினர் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலில், 14 தமிழ் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு, தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இந்த 14யுவதிகளும் வன்னிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும், இவர்கள் அரசசார்பற்ற நிறுவனத்தின் உதவியுடன் கைத்தொழில் பயிற்சியில் ஈடுபட்டு வந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் அனைவரும் ஒரே வீட்டில் தங்கியிருந்ததால், இவர்களைச் சந்தேகத்தின்பேரில் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்ததாகப் படையினர் தெரிவித்துள்ளனர். கைதுசெய்யப்பட்ட யுவதிகள் எவரும் இதுவரை நீதிமன்றில் ஆஜர் செய்யப்படவில்லை.

உழவு இயந்திர உரிமையாளருக்கான சந்திப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து உழவு இயந்திர உரிமையாளர்களுக்குமான சந்திப்பு - நாளை மறுதினம் பிற்பகல் 3 மணிக்கு கிளி நொச்சி பண்பாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உழவு இயந்திர உரிமையாளர் சங்கத் தலைவர் ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - எதிர்வரும் முதலாம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவுள்ள. தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு சம்பந்தமாக ஆராயப்படவுள்ளது.

இந்தச் சந்திப்பில் அனைத்துப் பிரதேசத்திற்குட்பட்ட உழவு இயந்திர உரிமையாளர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (நா)

கண்டாவளை - புளியம்பொக்கணையில் முன்பள்ளிக்கான அடிக்கல் நாட்டு விழா

கண்டாவளை

கண்டாவளை, புளியம்பொக்கணைப் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் புதிய முன்பள்ளிக்கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு - நேற்று முன்தினம் இடம்பெற்றது.

முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையப் பிரதேசக் கட்டமைப்புத் தலைவர் தனபாலசிங்கம் ரூபகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் - மங்கள விளக்கேற்றப்பட்டதையடுத்து, தேசியக்கொடியை வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர் சுடர் ஏற்றினார்.தமிழர்புனர் வாழ்வுக்கழகக் கொடியை கிளிநொச்சி மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பொறுப்பாளர் கெங்காதரன் ஏற்றினார்.

இதனையடுத்து முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய இணைப்பாளர் யோ.நிலா ஏற்றினார். கரைச்சி வடக்கு அபிவிருத்தி நிறுவனக் கொடியை கரைச்சி வடக்கு அபிவிருத்திப் பொருளாளர் மகேந்திரம் ஏற்றினார்.

முன்பள்ளிக் கல்விக் கட்டடத்துக்கான அடிக்கற்களை கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சந்திரசேகரம், பொருளாளர் மகேந்திரராஜா ஆகியோர் நாட்டினர்.

இந்த நிகழ்வில் கருத்துரைகளை வட்டக்கச்சி அரசியற்துறைப் பொறுப்பாளர், தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் கெங்காதரன், மாதர் சங்கத்தின் செயலாளர் திருமதி கணேசலிங்கம் ஆகியோர் நிகழ்த்தினர். நன்றியுரையை மூத்தவிநாயகர் முன்பள்ளி ஆசிரியர் சி. செல்வமலர் நிகழ்த்தினார்.

மன்னார் பிரதேசத்தில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரிப்பு!

மன்னார்

அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் மன்னாரில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்துள்ளது. கடந்த சனிக்கிழமை உப்புக்குளம், எழுத்தூர், எமில் நகர், சின்னக்கடை போன்ற பிரதேசங்களில் இராணுவத்தினர் வீடு வீடாகச் சென்று அடையாள அட்டைகளை சோதனை செய்து வீடுகளில் வசிப்பவர்களின் எண்ணிக்கையையும் கணக்கெடுத்து வருகின்றனர்.

இதேவேளை, மன்னார், மதவாச்சி வீதியில் பெருந்தொகையான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு வீதிச் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசமான அரிப்பு, சிலாவத்தை போன்ற இடங்களில் இரவு வேளை இராணுவத்தினர் அங்கு சென்று ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் தமது வீடுகளில் தங்குவதற்கு அச்சமடைந்துள்ளனர்.

காலச் சுவட்டில்...

இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

ஓகஸ்ட்- 24

1770: உலகப் புகழ்பெற்ற கவிஞர் தோமஸ் சாட்டர்டன் யாருமே ஆதரவளிக்காத காரணத்தால், வறுமையில் வாடி தனது 17 ஆவது வயதிலேயே தற்கொலை செய்து கொண்டார். இவரது கவிதைகள் பின்னாளில் கவிஞர்கள் பைரன், ஷெல்லி ஆகியோரால் புகழ்ந்து பேசப்பட்டன.

1814: எதுவித எதிர்ப்புமில்லாமல் வோஷிங்டன் நகரினுள் புகுந்த பிரித்தானியப் படைகள் வெள்ளை மாளிகை உட்பட முழு நகரையுமே தீயிட்டுக் கொழுத்தினர்.

1904: ரஷ்யா - ஜப்பான் போரில், லியோயாங் போரை ஆரம்பித்தது. செப்ரெம்பர் 4 ஆம் திகதி வரை நடந்த இந்தப் போரில், 18,000 ஜப்பானிய வீரர்களும், 16,000 ரஷ்ய வீரர்களும் பலியாகினர்.

1913: அமெரிக்காவில் உள்ளூர் பொதித் தபால் முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

1914: முதன் முதலாக பிரித்தானிய விமானம் ஜேர்மனியின் வெஸ்ஸினஸ் விமானத் தளத்தின் மீது குண்டுவீசித் தாக்கியது.

1918: எதிரி நாட்டினர் அனைவரையும் கைதுசெய்து சிறையில் அடைக்க வேண்டும் என்று பிரிட்டனின் பெரும்பாலான நகரங்களில் ஆர்ப்பாட்டங்கள் தொடங்கின.

1931: பிரிட்டனில் நிதி நெருக்கடி காரணமாக ராம்ஸே மாக்டொனால்ட் அமைச்சரவை பதவி விலகியது.

✪ : பிரான்ஸுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே ஆக்கிரமிப்பு எதிர்ப்பு உடன்படிக்கை ஏற்பட்டது.

1936: ஜேர்மனியில் இரண்டு ஆண்டுகால கட்டாய இராணுவப் பணிச் சட்டம் கொண்டுவரப்பட்டது.

1939: ஜேர்மனியைச் சேர்ந்த டொக்டர் ஹான் ஒஹெயின் என்பவரால் வடிவமைக்கப்பட்ட டர்போ ஜெட் விமானத்தின் வெள்ளோட்டம் நடைபெற்றது.

1940: அவுஸ்ரேலியாவின் அடிலெய்ட்டைச் சேர்ந்த பேராசிரியர் ஹோவார்ட் ஃப்ளோரி என்பவர் எழுதிய தூய பென்சிலின் தயாரிப்புப்பற்றிய ஆய்வுக் கட்டுரை லாண்செட் என்ற சஞ்சிகையில் வெளிவந்தது.

1947: தமிழில் கலைக்களஞ்சியம் பதிப்பிக்கும் பணிகள் இந்தியாவின் தமிழ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பதிப்பாசிரியர் பெரியசாமி தூரன்.

1954: அமெரிக்காவில் கம்யூனிஸ்ட் கட்சி சட்ட விரோதமான அமைப்பு என அறிவிக்கப்பட்டது.

1966: லூனா - 11 என்ற சந்திரகலம் ரஷ்யாவால் ஏவப்பட்டது.

1970: பிரிட்டனில் விண்ட்ஸ் கேல் அணு மின் நிலையத்தில் கதிரியக்கக் கசிவு ஏற்பட்டது.

1972: நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கம்பிள்ளை மரணமடைந்தார்.

1973: சீனாவில் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்தாவது மாநாடு தொடங்கியது. 28 ஆம் திகதி வரை நடைபெற்ற இந்த மாநாட்டில் சோவியத் ரஷ்யாவே சீனாவின் முதல் எதிரி என்று அறிவிக்கப்பட்டது.

1989: 1977 ஆம் ஆண்டு இதே மாதம் 20 ஆம் திகதி அமெரிக்காவால் ஏவப்பட்ட வாயேஜர் - 2 என்ற விண்கலம் நெப்டியூன் கோளின் வடதுருவத்துக்கு 5000 கிலோ மீற்றர் தொலைவு வரை சென்று தகவல் குறிப்புகளை அனுப்ப ஆரம்பித்தது.

1993: மாலைதீவின் ஜனாதிபதியாக மமூன் அப்துல் கையூம் நான்காவது முறையாகவும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

1994: இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராக யாழ். நூலக எரிப்பில் பங்குகொண்ட காமினி திஸநாயக்கா தெரிவு செய்யப்பட்டார்.

தொகுப்பு - சந்துரு

நமது ஈழநாடு

வைர வரிகள்

வேகம் மட்டும் போதாது. இலக்கினை முடிவுசெய்துவிட்டுப் புறப்படவேண்டும்.

- ஜேஸன் ஜென்னிங்க்ஸ் -

நமது நோக்கு

மக்களின் இயல்பு வாழ்வை முடக்கிவிட்டு சமாதானம்பற்றிப் பேசுதல் சாத்தியமா?

புரிந்துணர்வு உடன்பாட்டை முழுமையாக அமுல்செய்வது தொடர்பாகவும், அதனை அமுல்படுத்துவதில் உள்ள தடைகள் குறித்து ஆராயும் நோக்குடனும், தற்போது இலங்கையில் அமைதி மற்றும் சமாதான சூழலுக்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல்கள் குறித்தும் ஆராய்வதற்கென ஜனாதிபதியின் விருப்பின் பேரில் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவில் நடைபெறவுள்ளதாகக் கூறப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரல் தயாரிப்பு வேலைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டுவரும் வேளையில் - அதனைக் குழப்புவதற்கான திட்டங்களும் பேரினவாத சக்திகளால் தீட்டப்பட்டு வருகின்றமை ஒன்றும் இரகசியமான விடயமல்ல.

சமாதானப் பேச்சுக்களை விரும்புவதாகக் காட்டிக்கொள்ளும் ஜனாதிபதியும், அரசும் - தமிழ்மக்கள், இயல்பான சூழலில் வாழ்வதற்கான வாய்ப்புக்களை அல்லது சாத்தியக் கூறுகளை கட்டம்கட்டமாக நிராகரித்தபடியே அமைதி குறித்துப் பேச, கைகுலுக்க முனைவது, அர்த்தமற்ற நடவடிக்கையாகவே தென்படுகிறது. குறிப்பாக அவசரகால நிலையைப் பிரகடனம் செய்துவிட்டு அதன்மூலம் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வுக்கு அச்சுறுத்தலான சூழலை உருவாக்கி, அவர்களைப் பயப்பீதியுடன் நடமாட வைத்துவிட்டு வெளிநாடொன்றில் சமாதான முயற்சிகள் குறித்து ஆராய முற்படுவதன் அரசியல் உள்நோக்கம் தமிழ் மக்களோ, சர்வதேச சமூகமோ அறியாத ஒன்றல்ல. கடந்த காலங்களிலெல்லாம் சமாதானம் குறித்துப் பேசிக்கொண்டே இலங்கை அரசுகள், தமிழ் மக்களை ஒடுக்கும் நடவடிக்கைகளையும், போரை மீண்டும் தீணிப்பதற்கான வியூகங்களை அமைப்பதையும் ஏக காலத்தில் செய்து அனைவரையும் பேய்க்காட்டிய வரலாறுகள் மறக்கக்கூடியவையல்ல.

இப்போதும் அதேவழிமுறைகளையே இந்த அரசும் - அதாவது, ஜனாதிபதியும் தொடர்ந்து மேற்கொள்கிறார்கள் எனபதை, அவசரகால நிலைமைப் பிரகடனத்தின் கீழ் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் நிரூபித்து வருகின்றன.

ஆரோக்கியமான சமாதானச் சூழலை ஏற்படுத்தவும், ஆக்கபூர்வமான பேச்சுக்களை முன்னெடுக்கவும் இந்தச் சூழலும், நகர்வுகளும், ஏற்புடைய ஒன்றாகத் தெரியவில்லை.

மன்னாரில் பனந்தும்பு உற்பத்திப் பயிற்சிகளில் ஈடுபடத் தங்கியிருந்த 13 மாணவிகள் உட்பட 15 பேர் எந்தவிதமான காரணமுமின்றி கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்; தமது வாழ்க்கைக்கான தொழிற்பயிற்சி ஒன்றை மேற்கொள்ள பனந்தும்பு உற்பத்திப் பயிற்சி நிலையத்தில் தங்கியிருந்தவர்கள். அதுமட்டுமல்ல, இந்த நிலையம் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிதியுதவியுடன் பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தால் நடத்தப்படும் ஒன்றுமாகும். அதுமட்டுமல்ல கடந்த 12 வருட காலமாக இயங்கிவரும் இந்தக் கழகம் இலங்கையில் அரசசார்பற்ற நிறுவனமாகப் பதிவு செய்யப்பட்டதுமாகும்.

இவர்கள் விடுதலைப்புலி உறுப்பினர்களாக இருக்கலாம் என்ற சந்தேகத்திலேயே கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசரகால சட்ட விதிமுறைகளின் கீழ் படையினருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதீத அதிகாரத்தின் அடிப்படையிலேயே இக்கைதுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பதும், அனைவர் மனதிலும் எழக்கூடிய சந்தேகமாகும்.

இதேவேளை, கொழும்பு நகரில் படையினர் மேற்கொண்ட சோதனை மற்றும் தேடுதல் நடவடிக்கைகளிலும் 3 பெண்களுட்பட நால்வர் கைதாகியுள்ளனர்.

தேடுதல், சோதனை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அவர்களின் கடமைப் பொறுப்புக்களை எவரும் தடுக்கவோ, நிராகரிக்கவோ இல்லை. ஆனால், கைதான நபர்களை வெறுமனே சந்தேகத்தின் பேரில் விசாரணைகளின்றி நெடுங்காலம் தடுத்து வைப்பதும், அவர்களை உளவியல் சித்திரவதைகளுக்குள்ளாக்குவதும் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை நிராகரிக்கும் செயல்களாகும்.

ஏற்கனவே, அவசரகாலச் சட்டம் மற்றும் பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் கடந்த காலங்களில் இப்படிச் சந்தேகத்தின் பேரில் கைதான எத்தனையோ அப்பாவிகள் இன்னமும் விசாரணைகளின்றி, விடுதலையுமின்றி சிறைகளிலும், தடுப்பு முகாம்களிலும் வாடிவருவது தெரிந்த விடயமே....

நிலைமை இவ்வாறிருக்க, மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு உத்தரவாதமளிக்காத, அதனைத் தொடர்ந்து நிராகரித்துவருகின்ற பேரினவாத மேலாதிக்கச் சிந்தனை கொண்ட அரசுகளுடன் அமைதி மற்றும் சமாதானம் குறித்து, புரிந்துணர்வுடன் கூடிய நம்பிக்கையுடன் எப்படிப் பேசமுடியும் என்ற கேள்விக்குப் பதில்கூறவேண்டிய பொறுப்பு நோர்வே அனுசரணையாளர்களையும், சர்வதேச - சமாதானத்தை வலியுறுத்தும் சமூகத்தவரையுமே சாரும்.

இன்று, இந்த நாட்டில் நிலவும் அச்சுறுத்தலும், ஆபத்தும் நிறைந்த கறுப்புச் சட்டங்களின் ஆதிக்கத்தின் கீழான சூழலில், ஒஸ்லோவில் நடைபெறப்போகும் பேச்சுக்கள் எத்தகைய உத்தரவாதத்தை மக்களுக்கு - அதுவும் குறிப்பாகத் தமிழ் மக்களுக்கு வழங்கப் போகின்றது என்பதற்கு எவராலும் உறுதியான பதிலைத் தரவேமுடியாது.

மக்கள் எதிர்பார்ப்பது தீர்வுகளை மட்டுமே; நடைமுறைப்படுத்தப்படாத வாக்குறுதிகளையல்ல....

இதனை சமாதான அனுசரணையாளர்கள் புரிந்துகொள்வது அவசியமாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

நாடும் நடப்பும்



'ஊர்சுற்றி' யார் பார்வையில்...

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு வழிகாட்டியாகப் புதிய புத்த விகாரைகள்!

கொழும்பிலும், தலைமன்னாரிலும் மட்டுமல்ல. இலங்கையில் எந்தப் பகுதியிலும் தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் சந்தேகத்தின் மீது எந்தச் சமயத்திலும் கைது செய்யப்படலாம். அவசரகாலச் சட்டம் பிரகடனப் படுத்தப்பட்டிருப்பதைத் தொடர்ந்து பழைய படி தமிழ் இளைஞர்களும், யுவதிகளும் கைது செய்யப் படும் படலம் மீண்டும் தொடங்கியிருக்கிறது. இதே சமயம் யாழ்ப்பாணத்தில் மாதகல் பகுதியிலும், காங்கேசன் துறையிலும் புதிய புத்த விகாரைகள் அமைக்கப்பட்டுத் திறப்பு விழாக் களும் நடந்தேறியிருக்கின்றன. மன்னார்ப் பகுதியில் இராணுவம் முகாமிட்டுள்ள பகுதியிலும் சிறிய சிறிய புத்த விகாரைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லியபடியே வந்தமர்ந்தார் நண்பர் பரமசிவம்.

"கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்று எங்கள் தமிழ்க்கிழவி ஔவைப்பாட்டி சொன்னதை இப்போதுதான் அவர்கள் தெரிந்து கொண்டிருக்கிறார்களாக்கும் என்று சொன்னேன்.

அவர்கள் அதையும் சரியாகப் படித்துத் தெரிந்து கொள்ளவில்லைப் போலிருக்கிறது. கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்றுதான் சொல்லியிருக்கிறார். படைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாம்களில் படைத் தொழிலுக்கு 'மாறான' சுருணையையும், அன்பையும் போதித்த போதிமாதவனுக்குக் கோயில் கட்டுவது என்ன பொருத்தம்? என்று பரமசிவம் கேட்டார்.

கோயிலைக் கட்டிய பின் ஆட்களைக் கொண்டு வந்து குடியிருத்துவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்களோ என்னவோ. உயர்பாதுகாப்பு வலயம் என்று அவர்கள் சில இடங்களைத் தமது அதிகாரத்துக்குள் வைத்திருக்கிறார்கள். பாதுகாப்பு என்ற பெயரில் இந்தப்பகுதிக்குள் அவர்கள் எதையும் செய்யலாம் என்றேன்.

உணவில் தன்னிறைவு காண்பதற்கு என்று சொல்லி விவசாயத்தை விருத்தி செய்வதற்காகத் தென்னிலங்கையிலிருந்து சிங்களவர்களைத் திட்டமிட்டு சகல வசதிகளும் செய்து கொடுத்து குடியேற்றி முதல் பிரதமர் டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கைச் சிங்கள மயமாக்கும் பணியைத் தொடக்கி வைத்தார். பின்னர் சேருவாவில என்றும் கல்லோயாவில் திகவாபி என்றும் புராதன புத்த கோயில்கள் இருந்த இடங்கள் என்று சொல்லப்பட்டது. இந்தப்பகுதிகளில் சிங்களக் குடியேற்றம் நல்ல முறையில் நிறைவேற்றப்பட்டது. வடக்கில் கந்தரோடையில் பழைய "டகோபாக்கள்" இருந்த இடம் என்று அவை புதுப்பிக்கப்பட்டன. என்றாலும் வடக்கில் திட்டமிட்டுச் சிங்களவர்களைக் குடியேற்ற முடியாமல் போய்விட்டது. இப்பொழுது இராணுவம் வடக்கில் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் விகாரைகளை அமைத்துப் பின்னர் திட்டமிட்டு சிங்களவர்களைக் குடியேற்றலாம். தொடர்ந்து இவைகளே புராதன விகாரைகள் இருந்த இடங்களாகவும் பிரகடனப்படுத்தப்படலாம் என்று பரமசிவம் சொன்னார்.

அரச சுகபோகம், ஆடம்பர வாழ்க்கை, ஆள், அம்பு, எடுபிடி எல்லாம் இருந்தும் இவையொன்றுமே வேண்டாம் என்று சகலவற்றையும் துறந்து அரசமரத்தின் கீழ் அமர்ந்து புத்தரானவர் சித்தார்த்தர். இப்பொழுது புத்தர் சிலைகளைச் சந்திகளில் நிறுத்தி அவற்றுக்கு முள்வேலி அடைத்துப் போதாக் குறைக்கு ஆயுதந் தரித்த படையினரையும் பாதுகாப்புக்கு நிறுத்தி வைக்கும் நிலை இலங்கையில் ஏற்பட்டிருக்கிறது. புத்தர் சிலைகளை வைத்துப் பாதுகாப்புக் கொடுப்பதைவிட உயர் பாதுகாப்புப் பகுதிகளிலேயே விகாரைகளை அமைத்துவிடுவது சுலபம் என்று நினைத்துவிட்டார்கள் போலிருக்கிறது. கோயில்கள், விகாரைகள் பலவந்தமாக அமைக்கப்படுவதால் என்ன பயன்? இப்படி அமைப்பதால் அவற்றின் புனிதத் தன்மையே இல்லாமல் போய்விடுகிறது. அந்தந்தப் பகுதியிலுள்ள மக்கள் தங்கள் வழிபாட்டுக்காக அவற்றை அமைப்பது நியாயம். ஆனால் நாட்டைப் பாதுகாக்கும் கடமையைக் கொண்டிருக்கும் படையினர் தங்கியிருக்கும் இடங்களிலெல்லாம் விகாரைகள் அமைத்தால் அதற்கு என்ன அர்த்தம்? என்று கேட்டேன்.

கொழும்பிலும் மற்றும் ஊர்களிலும் எப்படிப் புத்த விகாரைகள் பல்கிப் பெருகியிருக்கின்றன என்பதைப் பார்த்தால் இந்தக் கேள்விக்கே இடமிருக்காது. பழைய நாடாளுமன்றக் கட்டடத்துக்குக் கோட்டையிலிருந்து போகும் வழியில் ரயில்வே தண்டவாளத்துக்கும் மெயின் வீதிக்கும் இடையே இப்பொழுது ஒரு பெரிய விகாரை இருக்கிறது. இந்த இடத்தில் இப்படியொரு விகாரை தோன்றுவதற்கான அடையாளமே முன்பு இருந்ததில்லை. இதே போல் கொட்டாஞ்சேனையில் கல்பொத்த வீதிச் சந்தியில் இப்பொழுது ஒரு விகாரையும் அங்கே அந்த விகாரையின் புத்தபிக்கு தங்கும் இடமும் எப்படி அமைந்திருக்கின்றன. விரைவில் செல்லமகால் தியேட்டருக் கருகே இரத்தினம் விளையாட்டு மைதான முகப்பிலும் ஒரு விகாரை தோன்றும். இதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இவை மக்கள் குடியிருக்கும் பகுதிகள். உயர் பாதுகாப்பு வலயத்தில் விகாரைகள் எதற்கு? இதற்குப் பதில் விரைவில் தெரிய வரலாம். இந்த விகாரைகளுக்குப் பொறுப்பாக பிக்குகள் வந்து அமருவார்கள். இதன்பின் அந்தப் பிக்குவே ஆட்களைக் கொண்டு வந்து குடியேற்றிவிடுவார். திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தை வடக்கில் தொடங்குவதற்குப் புத்தர் வழிகாட்டியாக இருக்கப்போகிறார் என்று சொன்னபடியே நடந்தார் பரமசிவம்.

திட்டமிட்ட கொலைப்பிரசாரம்!

வாசகர் நோக்கு...

இந்தியாவில் சுப்பிரமணியம் சுவாமியிலிருந்து வெளிநாடுகளிலுள்ள சிங்களவர்களும், இலங்கையில்- கொழும்பிலிருக்கும், ஆனந்தசங்கரியும், டக்ளசும், கொழும்பிலிருந்து வெளியாகும் சிங்கள, ஆங்கில ஊடகங்களும் விடுதலைப் புலிகளே கொலைகாரர்களென்று பிரசாரம் செய்கிறார்கள். கதிர்காமரின் கொலையைப் புலிகளே செய்ததாகச் சொல்கிறார்கள். கொழும்பில் குமார் பொன்னம் பலத்தை, ஊடகவியலாளர் சிவராமை யார் கொலை செய்தார்கள்? வடக்கிலும், கிழக்கிலும் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் -பாதுகாப்புப் படையினர் என்ற போர்வையில் படுகொலை செய்யப்பட்ட போது, சுப்பிரமணியம் சுவாமியோ வேறு எவரோ கவலைப்பட்டார்களா? விடுதலைப்புலிகள் ஆயுதம் ஏந்தியிருக்காவிட்டால், இப்பொழுது தமிழ் இனம் இலங்கையில் எஞ்சி இருந்திருக்குமா? கதிர்காமர் கொலைக்குக் கண்ணீர் விடுபவர்கள், 'பாதுகாப்பான வெலிக்கடைச்சிறைக்குள் 52 பேர் பயங்கரமாகக் கொல்லப்பட்டதற்கு எப்போதாவது கண்டனம் தெரிவித்திருக்கிறார்களா? விடுதலைப்புலிகள் மீது திட்டமிட்டு கொலைகாரர்கள் என்று பிரசாரம் செய்யப்படுகிறது. இப்பொழுது நோர்வேயையும் அனுப்பிவிட்டு, இந்தியாவைக் கொண்டு வரவும் இதே பேர்வழிகள் பிரசாரம் செய்கின்றனர்.

சங்காவை. கே.தணிகாசலம்

உளவளத் தொடர்பான விழிப்புணர்வை சமூகத்தில் ஏற்படுத்தல் அவசியமாகும்

■■

வாழ்க்கை வாழ்வதற்கே. இந்த உலகில் வாழ்வதற்காக ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பங்கள் அரிதானவை. இவற்றை உரியமுறையில் பயன்படுத்தி, எமது வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். எமது வாழ்க்கையை மேம்படுத்தினால் எங்கள் குடும்பம் வளம் பெறும். குடும்பம் வளம் பெற்றால், நாம் சார்ந்திருக்கின்ற கிராமம் வளம் பெறும். இதனால் எமது நாட்டையே வளமாக்கலாம்.

■■

ஏதோ ஒரு வகையில் உளவியல் தாக்கங்களுக்கு உட்பட்டவர்களே பெருமளவில் இன்று சமூகத்தில் உள்ளனர். உளவியல் தொடர்பான சமூக விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது மிக அவசியமானதாகவுள்ளது. இவ்வாறு குறிப்பிடுகிறார் உளவளத் துணையாளர் த.யூலி தயாளன்.

உளவளத்துணை என்பது இப்பொழுது எல்லோரும் உச்சரிக்கும் வார்த்தையாக வுள்ளது. உளவியல் தாக்கங்கள் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக ஏற்பட்டபோதிலும் - அதன் வீரியமும், முழுமையான விளக்க வெளி ப்பாடுகளும் கடந்த வருட இறு தியில் இருந்தே பெரும்பாலான வர்களால் சரிவர உணரமுடிந்தது. பல வடிவங்களில் தோன்றி யுள்ள உளவியல் தாக்கங்களை நிவர்த்தி செய்வதற்குப் பல தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் முன் வந்து செயலாற்றி வருகின்றன.

காலத்தின் கட்டாய தேவையை உணர்ந்து, உளவியல் களத்தில் கடந்த வருடம் தன்னையும் இணைத்துக் கொண்டது. 'விழி உள சமூக மேம்பாட்டு அமைப்பு' இந்த நிறுவனத்தலைவர் த.யூலி தயாளன் இந்தத் துறையில் உயர் கல்வி பெற்ற உளவளத்துணையாளர் - உளவளப் பாதையில் தமது நிறுவனம் பயணிக்கின்றமை தொடர்பாகயூலிதயாளன்பகிர்ந்துகொண்ட கருத்துக் களை நேர்காணல் வடிவில் வாசகர்கள் முன் வைக்கிறோம்.

இந்தத் துறையிலான பிரவேசம் மற்றும் இந்நிறுவனத்தை அமைத்தது தொடர்பாக...?

உளவியளாளர்களின் கருத்துப்படி யாழ்ப்பாணத்தில் ஏரா ளமான உளவியல் பிரச்சினைகள் இருக்கு. இந்தப் பிரச்சினைகளை ஈடுசெய்வதற்கான சேவைகள் போதுமானதாகவோ, அதே நேரம் திருப்திகரமானதாகவோ இல்லை.

'இந்தத் துறையில் கற்ற நாங்கள் இந்தத் துறையிலேயே பணியாற்ற வேண்டுமென்ற தீர்மானம் எனக்கும், என்னோடு இணைந்த வர்களுக்கும் ஏற்பட்டது. நாங்கள் சேவையை வழங்குவதற்குச் சரியான களம் கிடைக்காமையால், நாமும் ஓர் அமைப்பைத் தோற்றிவிப்போம் என்ற முடிவில் எமது அமைப்பை ஆரம்பித்தோம். முடிந்தளவுக்கு நல்ல முறையில் மக்களுக்கு சேவையாற்றி வருகிறோம்' என, நிறுவனத்தின் தோற்றம் பற்றி நிதானமாகப் பதிலளித்தார்.

விழி தொடர்ந்து விழித்திருக்கக் கூடியதான திட்டங்கள் பற்றி...?

இந்த அமைப்பை இந்தத் துறையில் பயிற்றப்பட்ட பட்டதாரிகளுடன் உளசமூகப் பணியாளர்களையும் இணைத்தே உரு வாக்கினோம். ஆரம்பத்தில் எம் மிடம் நிதி இல்லை. மனித உழைப்பையும், எங்களது திறமைகளையும் நம்பியே ஆரம்பித்தோம். எம்முடன் இணைந்தவர்கள் பல நிறுவனங்களுக்கு பயிற்சிகளை கொடுத்து, வேலைகளைச் செய்து அதில் வரும் வரு மானத்தின் ஒரு பகுதியை நிறுவனத்தின் திட்டங்களுக்குப் பயன்படுத்தி வந்தோம்.

இப்பொழுது சிறுவர் பாதுகாப்பு நிதியம், வேறு சில நிறுவனங்களின் அனுசரணையுடன் எமது திட்டங்களைச் செயற்படுத்தக் கூடியதாகவுள்ளது என, நீண்டகால சிந்தனையை வெளிப்படுத்தினார்.

சமூகத்தை 'விழி' எந்த வகையில் வழிநடத்தும் என்றதற்கு -

உளநலம் தொடர்பாக விழிப்புணர்வை ஏற்படுத்தி, சமூகத்தில் உளத்தாக்கங்களுக்கு உட்பட்டவர்கள் தாங்களாகவே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணக் கூடியதான நிலையை உருவாக்கும் நோக்குடன், உளவள ஆலோசனைகளை வழங்கி வருகி றோம். உளசமூக உளவளத்துணைப் பயிற்சி நெறிகளை வழங்கி, சமூகத்தில் குறிப்பிட்ட சிலரையாவது துறைசார்ந்த வர்களாக வெளிக்கொணர்தல். சிறுவர் கழகங்களை அமைத்து, சிறுவர் பாதுகாப்பு நலத் திட்டங்களைச் செயற்படுத்தி, ஆரோக்கியமானசிறுவர் பாரம்பரியத்தைத் தோற்றுவித்தல்.

இளைஞர்-யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சிகளை வழங்கி, முரண்பாடுகளை இனம்கண்டு தீர்ப்பது தொடர்பாகவும் திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறோம். இவ்வாறான செயற்பாடுகளால் சமூகத்துக்கு சேவையாற்றவுள்ளோம். இப்பொழுதும் செய்து வருகிறோம் என தமது பார்வையை இனம் காட்டினார்.

சிறுவர்கள் தொடர்பாக விழியின் பணி?...

தீவகத்தில் ஆறு இடங்களில் சிறுவர் கழகங்களை அமைத்து சிறுவர் கழகங்களினூடாக சிறுவர்களிடையே காணப்படும் பிரச்சினைகளைக் குறைப்பதுடன், இவற்றை வன்முறையற்ற வகையில் எவ்வாறு தீர்க்கலாம் என்ற ஆலோசனை அறிவுரைக ளையும் வழங்கி வருகிறோம்.

சிறுவர் ஒன்றித்துச் செயற்படு வதுடன், தமது தேவைகள், உரிமைகள் தொடர்பாகப் புரிந்து கொள்ளவும் முடிகிறது. அல்லப் பிட்டி, நாரந்தனை, சின்னமடு, துறையூர் அம்பிகைநகர், மெலிஞ்சிமுனை ஆகிய இடங்களில் சிறுவர் கழகங்களை அமைத்துள்ளோம்.

கழகத்திலுள்ள சிறுவர்கள் காலமாற்றங்களால் இளைஞர் - யுவதிகளாகின்ற போது, அவர்களுக்கான தொழிற்பயிற்சிகளு டன், தொழில் வாய்ப்புகளையும் வழங்கவுள்ளோம் என்று சிறுவர்களது ஆக்கங்களைக் காட்டி பெருமிதமடைந்தார்.

தீவகத்தைத் தெரிவுசெய்து, சிறுவர் கழகங்களை அமைத்தது பற்றி?...

யாழ். நகரிலிருந்து குறிப்பிட்டளவு தூரத்திலுள்ள தீவகத்துக்கு வெளித் தொடர்புகள் இல்லை. தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும் இந்தப் பகுதிகளுக்குச் சென்று செயற்படுவதில்லை. சமய, சமூகரீதியில் உயர் பதவிகளிலுள்ளவர்களில் அநேகர் தீவகத்தைச் சேர்ந்தவர்கள். இவர்களும் முயற்சி செய்யவில்லையே என்ற காரணத்துக் காக தீவகத்தில் நாம் செயற்படத் தீர்மானித்தோம். தீவகத்துப் பிள்ளைகளைப் பொறுத்தவரையில், சின்ன விடயங்களுக்கும் வன்முறை சார்ந்த வழிமுறைகளையே பின்பற்றுகிறார்கள். அடுத்து அவர்களுக்குச் சரியான பொழுது போக்கு இல்லை. உணர்ச்சிக்கான மாற்றங்களும் இல்லை.

இவற்றை இனம் கண்டு சமூக ஒன்றிப்புகள், கருத்தமர்வுகள், போன்றவற்றை நடத்தி சிறுவர் சஞ்சிகைகளை அவர்களினூடாகவே வெளியிட எண்ணியுள்ளோம். பொறுப்பான பயிற்சிகளைவழங்குவதால், அவர்கள் தாங்களாகவே சில பொறுப்புகளை எடுத்துச் செயற்படுவதுடன் ஒன்றித்து, வேறு கிராமச் சிறுவர்களையும் புரிந்து கொண்டும் செயற்பட வழிவகுக்கிறது என சிறுவர் கழகங்களுக்கு எம்மை அழைத்துச்சென்றார்.

புதிதாக பல தன்னார்வத்தொண்டு நிறுவனங்கள் இப்பொழுது செயற்பட்டு வருகின்றமை குறித்து...?

மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற நல்ல நோக்குடன், இவர்கள் செயற்படுவதைப் பாராட்ட வேண்டும். சில நிறுவனங்கள் உளவளத் துணையை மட்டும் தங்களது பணியாகக் கருதிச்செயற்படுகின்றன. ஏனைய சில நிறுவனங்கள் சமூகமேம்பாட்டு வேலைத் திட்டங்களை மேற் கொள்கின்றன. உண்மையில் உளவளத் துணை மட்டும் சமூகத்துக்குப் போதுமானதாக இல்லை. சமூகப் பொருளாதாரத் திட்டங்களையும் வழங்கக் கூடியதாக இருக்க வேண்டும். சில நிறுவனங்கள் தங்களது பெயரைப் பதிவு செய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளன. நாம் வேலை செய்யும் இடங்களுக்கு வேறு நிறுவனங்களை அனுமதிப்பதில்லை. அந்த இடத்தில் இப்படியான நிறுவனங்கள் ஒன்றை யோசிக்க வேண்டும். நாங்கள் மக்களுக்குத் தேவையான உளசமூக மேம்பாட்டு வேலைத் திட்டங்களை வழங்குகின்றோமா என்று தம்மைத் தாமே கேட்டுக் கொள்ள வேண் டும்.

இன்று யாழ்ப்பாணத்தில் இப்படியான ஒரு பிரச்சினையுள்ளது. எல்லோரும் ஒன்றித்து சேவைப்பகிர்வை மேற்கொண்டு, தேவையான சேவைகளை இனங்கண்டு வழங்க வேண்டுமென்றயதார்த்த நிலையை வெளிப்படுத்தினார்.

உளவளத் துணையாளர் என்ற வகையில் சமூகத்துக்கும், உங்களது துறைசார்ந்தவர்களுக்கும் நீங்கள் கூறுவது?...

நாங்கள் ஒவ்வொரு சேவை களையும் வழங்குவதற்கு வந்தவர்களே தவிர, எம்மைப் பெருமெடுப்பில் பதிவு செய்வதற்கல்ல என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும். சிலரது கதை, பேச்சுகளால் சேவை செய்யும் நிறு வனங்களைச் சோர்வடையச் செய் கிறோம். சுனாமிக்குப் பின்னர் உளவியல் தொடர்பான தேடல்களை அரச, அரச சார்பற்ற நிறு வனங்கள், ஊடகங்கள், பத்திரிகையாளர்கள் முனைப்புடன் மேற் கொள்கிறார்கள். இந்த உளவியல் தாக்கம் 20 வருடத்துக்கு முன்பே இருந்திருக்கிறது.

ஒவ்வொரு வரும் இதனை நல்ல வாய்ப்பாகக் கருதி, மக்களுக்கு உளநலம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வழி வகைகளைப் பின்பற்ற வேண்டும். கடந்த கால யுத்தத்தின் விளைவாக மக்களின் அநேக பகுதியினர் தங்கி வாழ்வோராகத் தம்மை மாற்றிக் கொண்டதுடன், எதிர்பார்த்து வாழப் பழகிக் கொண்டுள்ளனர். கடந்த வருட இறுதியிலிருந்தே இவை மேலும் அதிகரித்துள்ளது. இவற்றிலிருந்து மக்களை விடுவிக்க உதவி செய்யும் நிறுவனங்களே தமது உதவிகளை வேறு வடிவங்களில் வழங்கி, மக்களைச் சுயமாக இயங்க விட வேண்டும்.

இப்பொழுது எல்லா நிறுவனங்களுமே ஒரே வகையான பொருட்களை வழங்குகின்றார்கள். இவற்றைப் பெறுவோர் மிகக் குறைந்த விலையில் விற்றுத் தமது வேறு தேவைகளை நிறைவு செய்கின்றனர். இந்த நிலை மாறவேண்டுமாயின், உதவி நிறுவனங்கள் விழிப்புடன் தூரநோக்கான செயற்திட்டங்களை மேற் கொள்ள வேண்டும்.

வாழ்க்கை வாழ்வதற்கே. இந்த உலகில் வாழ்வதற்காக ஒவ்வொருவருக்கும் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பங்கள் அரிதானவை. இவற்றை உரியமுறையில் பயன்படுத்தி, எமது வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும். எமது வாழ்க்கையை மேம்படுத்தினால் எங்கள் குடும்பம் வளம் பெறும். குடும்பம் வளம் பெற்றால், நாம் சார்ந்திருக்கின்ற கிராமம் வளம் பெறும். இதனால் எமது நாட்டையே வழமாக்கலாம்.

தன்னளவில் நிறைவாக வாழ்பவர் ஒவ்வொருவரும் சமூகத்துக்கு தன்னாலான சேவைகளை வழங்க முன்வருவர். இதனூடாக வாழ்க்கையின் அர்த்தத்தை உணர முடியுமெனத் தனது கருத்துகளை நிறைவு செய்தார் யூலி தயாளன். சிந்திக்கவேண்டிய கருத்துக்கள் மட்டுமல்ல செயற்படுத்தப்பட வேண்டியவையும் கூட...

விஜேந்திரன்

சூழலியல்...

சூழல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியம்

நாம் வாழும் சூழல் என்பது பல உயிருள்ள, உயிரற்ற கூறுகளுடைய தொகுப்பு எனக்கூறலாம். அவ்வாறான சூழலில் உயிர் களைப் பிரித்தறியும் பகுத்தறிவுள்ள மனி தனும் ஒரு கூறாகிறான். சூழலானது எப்போதும் சமநிலையிலேயே இயங்கிக் கொண்டிருந்தால் மட்டுமே அது மனிதனுக்குப் பயனுள்ளதாக அமையும். மாறாக சூழலின் சமநிலை மாற்றமடைந்தால், அது பாரிய விளைவுகளைத் தோற்றுவிக்கும்.

மனிதன் தனது ஆதிக்கவாதத்தினால் சூழலைச் சிதைத்துத் தன்னை நிலைநாட்ட விரும்புகிறான். ஆனால் இதன் மூலம் தனக்குத்தானே கெடுதலை மறைமுகமாக அவனே தேடிக்கொள்கிறான்.

மனிதனது ஆதிக்கத்தினால் சூழல் எவ்வாறு மாற்றமடைகிறது அல்லது பாதிக் கப்படைகிறது என்பதை நோக்கும் போது, மனிதனது அன்றாட வாழ்வியல் நடவடிக்கைகளினாலேயே பெரும்பாலும் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. அதாவது - தொழிற் சாலைக் கழிவுகளைச் சிதறி வீசுதல், காடளிப்பு, பொலித்தீன் பாவனை என்பவற்றைக் குறிப்பிடலாம். இது தவிர சனத் தொகை உயர்ச்சியும் சூழல் மாசடைவதற்குக் காரணமாக அமைகிறது. மனித நடவடிக்கைகளுக்கு சூழலிலுள்ள சகல வளங்களும் சுரண்டப்பட்டு, மனித தேவை நிறைவு செய்யப்படுகிறது. சனத்தொகைக்கு ஏற்ப பொருளாதாரமும், வதிவிடமும், தொழிற்சாலைகளும், போக்குவரத்து போன் றவையும்பெருகிவருகிறது.

எனவே இவற்றைச் செயற்படுத்த இடப் பற்றாக்குறை ஒரு பிரதான தடையாக உள்ளது. ஆகவே அத்தடையை நீக்க காடளிப்பு இடம்பெறுகிறது. இவ்வாறான காடளிப்பால் மண்சரிவு, மண்ணரிப்பு என்பன ஏற்படுகின்றன. புல் நிலங்கள் அழிப்பு, காடளிப்பு போன்றவற்றால் மேற்பரப்பு நீரோட்டங்களிலும் பெருமளவு மண் அள்ளிச் செல்லப்படுகிறது. வருடந் தோறும் காலநிலை மாற்றங்களால் 3500 மீற்றர் வரையான நிலப்பிரதேசம் வறண்ட பாலை நிலமாக மாறி வருகிறது. இவை அனைத்தையும் விட, இவ்வாறான நிலை தொடர்ந்தால், சொற்ப காலத்துக்குள் மனி தன் உயிர்வாழ முடியாதசூழல் உருவாகும் என்பதை யாராலும் மறுக்கமுடியாது.

மனித தேவைகளின் நிமித்தம் விவசாய நிலங்களில் பீடை கொல்லிகளின் பாவனை, இராசயன வளமாக்கிகள் பெரிதும் பயன்படுதல் போன்றவற்றின் மூலம் நிலம் மாசடைகிறது. இவ்வாறான செயற்பாடுகளால் வருடந்தோறும் 7 வீதமான விளை நிலங்கள்மாசடைகிறது என F.F.O அறிக்கை கூறுகிறது.

வளியானது அதிகரித்து வரும் வாகன நெரிசல் காரணமாக வெளிவரும் புகைகள், தொழிற்சாலைப் புகைகள், குப்பை கூழங்கள் எரிப்பு (பொலித்தீன்) போன்ற வற்றால் வளிமாசடைவதால் பச்சை வீட்டு விளைவு (O3) ஓசோன் படைத்தேய்வு, அயன மண்டலக் காடளிப்புப் போன்றவற்றால் புவியினுடைய வெப்பநிலை அதிகரித்து, மனிதனுடையஅன்றாடச் செயற்பாடுகளை நலிவடையச் செய்கிறது.

நீரானது மாசடைதலைப் பற்றி நோக்கும் போது, கழிவுகளை நீர் நிலைக்குள் கொட் டுதல், மீன்பிடித்தொழிலில் ஈடுபடும் படகுகளிலிருந்து வெளியேறும் கழிவுகள் போன்றன நீருடன் சேர்ந்து நீரை மாசடை யச் செய்கிறது.

சூழலை மாசுபடுத்தும் காரணிகளாக - சுற்றுலாத்துறை நடவடிக்கைகள், பாரிய தொழிற்சாலைகளின் இயந்திரமாக்கல் செயற்பாடுகள், இயற்கை அனர்த்தங்கள், வறட்சி, சூறாவளி போன்றவற்றால் புவி தனது செயற்பாட்டை இழக்க நேரிடு கிறது. மனிதனது செயற்பாடுகளால் மட்டுமே சூழல் மாசடைவதில்லை. இருப்பினும், சூழலின் பாதிப்புக்குப் பெரிதும் காரணமாக இருப்பவன் மனிதன் என்பதை மறுக்க முடியாது.

சூழலானது மாசடைவதால், மனிதனுக்கு இழப்பு ஏற்படக்கூடிய வகையில் பல்வேறு பட்ட நோய்களும் ஏற்படுகிறது. அதாவது - தோல் புற்றுநோய், கண் தொடர்பான தைபொயிட் போன்ற நோய்கள் ஏற்படுகின்றன. ஏன் இவ்வாறான நோய்களுக்குள் உள்வாங்கப்பட்டு இன்னல்களை அனுபவிக்க வேண்டும். இது தன்னால் தனக்கே உரு வாக்கிக்கொண்ட ஆபத்து. மனித கால்கள் மறுமலர்ச்சியை நோக்கி நடைபோடும் போது, தன் பின்வரும் அழிவைக் கடந்து செல்ல மனிதன் முயற்சிக்கிறான். ஆனால் அவன் அழிவிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாத நிலையில் சிரமப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சூழலின் மீது மனிதனது கவனம் 1960 இற்குப் பின்னரே அதிகமாக எழுந்தது. சூழல் தொடர்பான கருத்துகளும், கொள் கைகளும் முன்வைக்கப்பட்டு நடைமுறைப் படுத்தப்பட்டது. உலகளாவிய ரீதியில் விழிப் புணர்வுகள் ஏற்படுத்தப்பட்டது. அதன் மையமாக மாநாடுகள் கூட்டப்பட்டது.

1972 இல் ஸ்ரொக்கெம் மாநாடும், 1985 இல் வியட்நாம் உடன்படிக்கையும், 1987 இல் மொன்றியல் மாநாடும்,1992 இல் மிகிந்தலை தியோரா மாநாடும் தமது திட்டங்கள் செயற்பாடுகளை முன்வைத்து உலகளாவிய ரீதியில் செயற்படுத்தின. இந்தத் திட்டங்களுக்கு பல உலக நாடுகள் நிதி உதவி செய்தன.

தற்போது கூட இவ்வாறு சூழல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் பல அரச சார்பற்ற நிறுவனங்கள் பல திட்டங்களை செயற்படுத்தி வருகிறது. அரசு கூடத் தற்போது சூழல் தொடர்பான நடவடிக்கைகளில் பெரிதும் கவனம் செலுத்தி வருகிறது. எவ்வாறான செயற்பாடுகளைச் செய்வதன் மூலம் சூழலை மாசடையாமல் தடுக்க முடியும் என்ற ஆய்வுகளில் பல வெளிநாட்டு நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. பல நிதி நிறுவனங்கள் இவ்வாறான சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளுக்கு நிதி வழங்கத் தயாராக உள்ளன.

இத்தகைய திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு, வெற்றி பெற்றால் மனித வாழ்விலும் சுகந்தம் நிலவும் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.

எது எவ்வாறு இருந்தாலும், ஒவ்வொரு மனிதனுடைய மனங்களிலும் இது எமது சூழல் இதை நாமே பேணிப்பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் ஆழமாகப் பதியவேண்டும் 'சூழல் பாதுகாப்பு என்பது கற்பாறையின் மீது கட்டப்பட்ட வீடாய் மனித மனங்களில் பதியப்படவேண்டும்.

சூழலை நாம் பாதுகாத்தால்
சூழல் எம்மைப் பாதுகாக்கும்.

தி.திருசாந்

மும்பையில் 4 அடுக்குமாடிக் குடியிருப்பு இடிந்து விழுந்ததில் 11 பேர் உயிரிழந்தனர்

மும்பை

மும்பை தெற்கு மத்திய பகுதியில் இருக்கும் நாக்பாடா நகரில் உள்ள தெம்கார் வீதியில் சதாப் என்ற பெயரில் 100 ஆண்டு பழமை வாய்ந்த 4 அடுக்கு மாடிக் குடியிருப்பு கட்டடம் உள்ளது.

இதில் 16 பிளாட்கள் உள்ளன. இங்கு 100க்கும் மேற்பட்டோர் வசித்து வந்தனர். நேற்று அதிகாலை 1.10 மணியளவில் திடீரென அடுக்குமாடி கட்டடத்தின் நடுப்பகுதி இடிந்து விழுந்தது. அப்போது குடியிருப்பில் வசித்தவர்கள் அனைவரும் நல்ல தூக்கத்தில் இருந்தனர்.

இதனால் கட்டட இடிபாடுகளில் அனைவரும் சிக்கிக்கொண்டனர். இதில் 7 பெண்கள், 3 ஆண்கள், ஒரு குழந்தை உட்பட 11பேர் உடல் நசுங்கி பலியானார்கள். 90 பேர் படுகாயம் அடைந்தனர். கட்டடம் இடிந்ததகவலை அந்த வழியாக ரோந்து சென்ற 2 பொலிஸார் கவனித்து தீயணைப்பு நிலையம் மற்றும் பொலிஸ் நிலையங்களுக்குத் தகவல் தெரிவித்தனர்.

இதை அறிந்த தீயணைப்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர். அவர்கள் இதுவரை படுகாயம் அடைந்த 47 பேரை மீட்டனர். இன்னும்பலர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர்.

இந்தப் பகுதிக்கு கட்டடங்களை வெட்டி எடுக்கும் இயந்திரம் மற்றும் பாரம்தூக்கி ஆகியவற்றைக் கொண்டு செல்ல முடியவில்லை.

இதனால் தீயணைப்பு படையினரால் விரைந்து மீட்பு பணியில் ஈடுபட முடியவில்லை.

காயத்துடன் மீட்கப்பட்ட அனைவரும் அருகிலுள்ள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். அருகிலுள்ள குடியிருப்புகளைச் சேர்ந்த பொதுமக்கள் கூறும் போது - இன்னும் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கியிருப்பார்கள் என்று தெரிவித்தனர்.

அடுக்குமாடி கட்டடம் மிகவும் பழமை வாய்ந்தது என்பதாலும், சில வாரங்களுக்கு முன்பு மும்பையில் பெய்த கனத்த மழையால் சேதம் அடைந்து இருந்ததாலும் திடீரென இடிந்து விழுந்துவிட்டதாகத் தெரிகிறது.

போலந்து விமானப்படைத் தளபதி விமான விபத்தில் உயிரிழந்தார்

வார்சா

போலந்து விமானப்படைத்தளபதி ஜெனரல் ஜாசெக்பார்டோஸ் விமான விபத்தில் மரணமானார். இதுகுறித்து போலந்து நாட்டின் இராணுவ செய்தித்தொடர்பாளர் கூறியதாவது:

போலந்து நாட்டின் விமானப் படைத் தளபதி ஜெனரல் ஜாசெக் பார்டோஸ் ஜோஸ் (44) கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த விமான விபத்தில் மரணமானார். இரண்டு பேர் அமரக்கூடிய தனியார் விமானத்தில் ஜெனரலும் அவரின் நண்பரும் சென்றனர். விபத்து குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஜெனரல் ஜாசெக் கடந்தவாரம்தான் விமானப் படைத் தளபதியாக பதவியுயர்வு பெற்றார். அவர் அமெரிக்காவில் ஒரு வாரம் சிறப்பு பயிற்சியும் பெற்றுள்ளார் என அவர் தெரிவித்தார்.

இயக்குநர் சூர்யா கைது

சென்னை

இயக்குநர் சூர்யா அவரது வீட்டில் வைத்து நேற்றுக்காலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார்.

இயக்குநர் சூர்யா இயக்கி நடித்த நியூ படம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியது. பெண்கள் அமைப்புகள் சார்பில்கடும் எதிர்ப்புதெரிவிக்கப்பட்டது.

இந்தப் படம் ஆபாசமாக இருப்பதாகவும், இரட்டை அர்த்தம் கொண்ட வசனங்கள் இடம் பெற்றுள்ளதாகவும் புகார் கூறப்பட்டது.

இந்த நிலையில் தணிக்கை சபை அதிகாரிகளிடம், நியூ படத்தில் புதிய பாடல் காட்சி ஒன்றைச் சேர்க்க அனுமதிக்க வேண்டும் என்று சூர்யா வற்புறுத்தினார். பாடல் காட்சி ஆபாசமாக இருந்ததால் அதைச் சேர்க்க அனுமதியளிக்க வில்லை. இதனால் தணிக்கைசபை அதிகாரிகளுக்கும் அவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டது.

இதனால் ஆத்திரம் அடைந்த இயக்குநர் சூர்யா தணிக்கைக்குழு அதிகாரிகளில் ஒருவரான வானதியிடம் தகராறு செய்ததாகத் தெரிகிறது. ஒரு கட்டத்தில் கடும்கோபம் கொண்டு வானதி மீது சூர்யா செல்போனை வீசியதாகக் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக வானதி சீனிவாசன் நுங்கம்பாக்கம் பொலிஸில் புகார் செய்தார். இதனடிப்படையில், சூர்யா மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம்



எழும்பூர் நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. சாட்சி சொல்ல வானதி, திரைப்பட தணிக்கை அலுவலக உதவியாளர் ரங்கன், உதவி அதிகாரி தனசேகரன் ஆகியோர் நீதிமன்றுக்கு வந்தனர்.

ஆனால், சூர்யா நீதிமன்றில் ஆஜராகவில்லை. அவருக்குப் பதிலாக அவர் தரப்பில் சட்டத்தரணி ஒரு மனுவை தாக்கல் செய்தார். சூர்யா தற்போது நீதிமன்றுக்கு வரமுடியாத சூழ்நிலையில் இருப்பதால் அவர் ஆஜராவதற்கு விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரியிருந்தார்.

சூர்யாவின் அந்த மனுவை, நீதிமன்று ஏற்காமல் தள்ளுபடி செய்தது. அதைத் தொடர்ந்து சூர்யா பிணையில் வெளிவர முடியாத பிடியாணை பிறப்பிப்பதாகவும் நீதிபதி உத்தரவிட்டார்.

சென்னையை அடுத்துள்ள மாயாஜால் பொழுதுபோக்கு பூங்காவில் கல்வனின் காதலி படப்பிடிப்பில் ஈடுபட்டிருந்த சூர்யாவை பொலிஸார் எந்த நேரத்திலும் கைது செய்யலாம் என்ற சூழ்நிலை உருவாகியது.

